தென்மொழி

தனித் தமிழ்
இலக்கியத்திங்களிதழ்

எத்தனை நாள் இந்திப்போர்?

எத்தனை நாள் எத்தனை ஆண்
டெத்தனைப் போர் எத்தனைப் பேர்
எத்தனைத் தோள் இந்திக் கெழுவதோ?
எத்தனைப்பேச் செத்தனைத்தாள்
எத்தனைப் பா டெத்தனைப் பாட்
டெத்தனைதாம் எழுதிக் குவிப்பதோ?
எத்தனை நாள் நாம் பொறுப்ப
தெத்தனைப்பேர் நாமிறப்ப
தெத்தனைநாள் இந்தி எதிர்ப்பதோ?
ஒத்திணையும் எண்ணமிலை;
ஒன்றிரண்டு பார்த்துவிட
ஊர்ப்படைக்கு நன்னொன் றுரைப்பமே!

சுவடி: ரு; ஓலை: ௧௧, ௧௨
சிலை, சுறவம் (மார்கழி, தை) ௧௯௯௮, ௯௯

PUBLIC LIBRARY
27 JAN 1968

காசு

-நமக்கு வந்த மடல்கள்-

O தமிழ் மாநாட்டில் மொழிப்பெரும் புலவர் பாவாணர் அவர்களுக்குத் தக்க இடம் கிடைக்காதது கண்டு என் மனம் மிகவும் வருந்தியது.

மா. திருநாவுக்கரசு, மாப்படுகை, தஞ்சை.

O தங்களின் தமிழார்வத்தைப் பாராட்டுகின்றேன். ஆனால் Oxford University-ஐ எருதந்துறைப் பல்கலைக்கழகம் என்று மொழிபெயர்த்திருப்பதை எவரும் விரும்பி ஏற்கமாட்டார்கள். இது தங்கள் மொழி வெறியையே காட்டுகின்றது. இத்தகைய பெயர்ப்புகள் தமிழ் வளர்ச்சிக்குத் துணை செய்யா.

மே. பெ. வாசுதேவன். இ. வணிகம். (மதி) புரசை-சென்னை-7.

O தங்கள் அருந்தமிழ்த் தொண்டினைத் தமிழுணர்வற்றவரே தூற்றுவர் வளம் நிறைந்ததோருலகுக்கு வெற்றிநடையிட்டுச் செல்லும் உங்களைத் தொடர்ந்து வருகுது பாரீர் ஒரு பண்பாளர் கூட்டம்!... இன்னல் பலவும் உள்ள உங்கள் வழியில் கல்லும் முள்ளும் இல்லாமலில்லை. தங்களைத் தொடரும் எம்மனோர் அவற்றைப் பார்ப்பதும் இல்லை. தென்மொழியில் அரசியல் வேண்டா. அஞ்சுகின்றோம். உங்களுக்குப்பின் பண்பட்ட ஒரு குமுகாயத்தைத் தோற்றுவித்த பெருமை உங்களையே சாரும் என்பதில் ஐயமில்லை. -தமிழ்வள்வன். நிலக்கோட்டை, மதுரை.

O ஆசிரியவுரைகள் தங்களின் ஆழ்ந்த அரசியல் அறிவையும் தெளிந்த எதிர்காலக் கொள்கையையும் விளக்குகின்றமை கண்டு மிகவும் பெருமைப்படுகின்றேன். உலகத் தமிழ்க் கருத்தரங்கு குறித்து எழுதப்பெற்ற உரை அரசினர் தம் ஆரவாரச் செயல்களுக்கு ஓர் எச்சரிக்கை. வெற்றாரவாரச் செயல்களையும் புகழ்விரும்பும் போக்கையும் கண்டு தமிழ்நிலை என்னாகுமோ என்று வருந்துகின்றேன். அத்துடன் பாவாணர் அவர்களைக் கருத்தரங்கிற்கு அழைக்காதது கண்டு உள்ளம் கொதிக்கின்றது. போலிகள் பெருகிவிட்டனர். அவர்களை ஒழித்துத் தனித்தமிழ் காத்திட வல்லது தென்மொழி ஒன்றுமட்டுமே. என் உயிர் உள்ளளவும் தங்கட்குத் துணைவருவேன்.

-அரங்க. இராமச்சந்திரன், அறி இ; ஆ.ப. வீரகனூர், ஆத்தூர்.

O சுக்கும் கனலாய்க் கயவர் கனன்றிடினும், நக்கீரம் பேசுவோம் நாம். நனி இதழ் தமிழன்னைக்காகத் தாங்கள் பட்டு வரும் அல்லலைத் தெளிவாக்குகின்றது. அஞ்சற்க. நீங்கள் வடிக்கும் ஒவ்வோர் எழுத்தும் ஒவ்வொரு தனித்தமிழ் மகனைத் தோற்றுவிக்கும். இன்று தென்மொழியை வீழ்த்த ஒரு கும்பல் முனையலாம். நாளை நம் தனித்தமிழ்ப் படை அதனை ஒடுக்கவே செய்யும். இஃது உறுதி! தமிழகத்தில் இது நடக்கவே போகிறது.

-சி. அறிவுறுவோன். அம்மையகரம், வாகூர், தஞ்சை.

O தங்களின் உறுதியான கோட்பாடு அன்னைத் தமிழ்க்குத் தற்காப்பு அணிகலன். என்றும் தங்களைப் பின்தொடர்ந்து வருகின்றோம். தங்கள் உடலிலிருந்து ஒரு சொட்டுக்குருதி சிந்தினாலும் உள்ளம் கொதித்திடுவோம்.

-மணி. பெங்களூர்-2.

O இன்று உங்களுக்குப் பகைவர்கள் பல்கியுள்ளர். அரசினரே உங்கள் உண்மை உழைப்பைப் புரிந்துகொள்ளவில்லை! அரசியல் கட்சிப் பித்தர்கள் உங்கள் நேர்மையையும் அரசியலறிவையும் அறியாராகிப் பலவாறு உளறிக் கொண்டிருக்கின்றனர்.

-தமிழன்பர்கள், நத்தம், திருப்பத்தூர். வ. ஆ.

[தொடர்ச்சி 3 ஆம் அட்டைப்பக்கம்]

தென்மொழி

இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே.

சுவடி - 5 : ஓலை-11, 12

சிலை, (மார்கழி) சுறவம் (தை) தி.பி. ௧௯௯௮, ௯௯
(1967-திசம்பர், 1968-சனவரி)
பொறுப்பாசிரியர்:- பெருஞ்சித்திரன்
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1

இந்தி எதிர்ப்பு- இரண்டாம் கட்டம்!



சென்ற மாதம் மாணவர் நடத்திய இந்திப் போராட்டம் பற்றிப் பலரும் பலவகைக் கருத்துகளையும் அறிவித்தனர். இந்தி எதிர்ப்பின் சார்பாக நின்று இயங்கிய தலைவர்கள் முதல் இந்திக்குத் துணையாக நின்று இயக்கிய நடுவணரசுப் பட்டாள ஆட்சித் தலைவர்கள் வரை, இருதரப்பிலும் அக்கறை கொண்டவர்களும், அக்கறை கொண்டவர்கள்போல் நடித்தவர்களும் ஒவ்வொரு நாளும் பலவகையான உரைகளும் அறிக்கைகளுமாகப்

கும், தி. மு. க. ஆட்சிக்காலமாகிய இன்றை நடந்த போராட்டம் அவ்வாறு மிகுந்த சேதம் விளைவியாமற் போனதற்கும் தலையாய ஒரு காரணம் போராட்டத்திற்கு ஓர் எதிர்விளைவும் இல்லாமற் போனமையே. திரு. பக்தவத்சலம் போலன்றி. திரு. அண்ணாத்துரை அரசியல் சார்பில் எந்தவகையான எதிர் விளைவையும் காட்டவில்லை. அதுவுமன்றிக் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கிய போராட்டத்தின்மேல் அன்புப் புனல் (!) வேறு தெளித்தார். உடனே மாணவர்கள் போராட்டத்தை எவ்வாறு தொடங்கினார்களோ அவ்வாறே முடித்தும் கொண்டனர். இந்நிலையில் நாம் இங்கெடுத்துக்கொண்டு விரித்துப் பேச விரும்புவது இரண்டு நிகழ்ச்சி பற்றியே. ஒன்று இந்தியெதிர்ப்பில் தம் கட்சியே தலையாய முனைப்பு வாய்ந்தது என்று கூறிக்கொள்ளும் தமிழக ஆட்சித் தலைவர்கள் போராட்டத்தை அடக்க விரும்பி மாணவர் கனப்புக்கு அன்புப் புனல் தெளிப்பானேன்? திரு. பக்தவத்சலம் காலத்தும் இவ்வாறு தெளிக்கப்பட்டதே எனின் அதற்குரிய பொருளும்பயனும் அவர்கள் எதிர்பார்த்தபடி கிடைத்துவிட்டன. அதன்பின் நடுவணரசின்மேல் ஒற்றையடியாக விழுந்து கொண்டிருந்த நிலைபோய், இரட்டையடியாக வீழ்கின்ற ஒரு நிலை வாய்த்தபொழுது, ஏன் ஓங்கிக்கொண்டிருக்கும் ஒருகையைத் தாழ்த்திக் கொண்டதுமன்றி, மறுகையையும் ஏன் தாங்கிக் கொள்ளுதல் வேண்டும். இஃது அரசியல் அறமா? அல்லது அரசியல் திறமா? என்பது அரசியல் காயாட்டக்காரர் திரு. இராசாசி அவர்களுக்கே வெளிப்படை! "தம் மூளைத்திறன் இராசாசியின் மூளைத் திறனுக்கு எவ்வகையிலும் தாழ்ந்ததில்லை; அதனால் எந்த நிகழ்கால அரசியல் நடவடிக்கைகளைப் பற்றியும் கணித்தும் நிறைபிட்டும் பார்த்தல் வேண்டா" என்று திரு. அண்ணாத்துரையவர்கள் கமுக்கமாகக் கூறுவாரானால், நாம் அவருக்கும் ஒன்று மீண்டும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். "திரு. இராசாசி அவர்களைப் பற்றியும் அவர் கொடிவழி பற்றியும் நாம் முன்பே தெள்ளத்தெளிவாக, என்றும் பொய் போகாத கருத்துகளை எழுதியுள்ளோம். அவர் அரசியல் சூழ்ச்சி அவர் வாழும் இற்றைக் காலத்து உள்ள எந்த அரசியல் விரகாளர்க்கும் எளிதே புரிவதன்று. தமிழனுக்கு எப்படி ஓர் இயற்கையான பண்பாடு இருப்பதாக திரு. இராசாசி கூறுகின்றாரோ, அப்படியே ஆரியப்பார்ப்பனருக்கும் இயற்கையிலேயே ஒரு திறமை உண்டு. அவர்கள் அறிவால் வெல்லப்படுகையில் சூழ்ச்சியைப் பயன்படுத்துவர்; சூழ்ச்சியால் வெல்லப்படுகையில் அறிவைப் பயன்படுத்துவர். (இவ்விடத்தில் சூழ்ச்சியும் அறிவும் ஒன்றுபோல்வன என்பார்க்கொரு விளக்கம். அறிவு

நேரடியாக நின்று வெற்றிபெறுவது; அல்லது தோல்வியுறுவது. சூழ்ச்சி மறைமுகமாக நின்று தோல்வியுறுவது; அல்லது வெற்றிபெறுவது. அறிவு சருக்கரை போல நேரடியாக உண்ணக்கூடியது; சூழ்ச்சி உப்பு போலப் பிறவற்றோடு மறைமுகமாகவே உண்ணக்கூடியது. இவ்வறிவும் சூழ்ச்சியும் 'வேதங்களும்', இதிகாசங்களும் விளங்கவறிந்த இராசாசி போல்வார்க்குக் கைவந்த கட்டாறிகள்.) இத்தகு ஆற்றல் வாய்ந்த திரு. இராசாசி பல்பிடுங்கப்பெற்ற குமுகாய நச்சுப் பாம்பு என்பதை திரு. அண்ணாத்துரை யுள்ளிட்ட அனைவர்க்கும் துணிவுடன் எடுத்துக்காட்ட விரும்புகின்றோம். அப்பாம்பு தன்னால் இயலாவிடினும் தன் இனத்தாரை விட்டாவது கடிக்கச் செய்யும்.

மேலும் இற்றை நடந்த இந்திப் போராட்டத்தைக் குமுகாயப் பகைவர்கள் (சமூக விரோதிகள்) கைக்கொண்டனர் என்றும், அது முழுக்கவும் மாணவர்களாலேயே நடத்தப்பெற்ற ஒரு போராட்டம் அன்று என்றும் பலவாறு அரசியல் வண்ணத்தோடும், அதிகார எண்ணத்தோடும் தமிழக அமைச்சர்கள் பூசிமெழுகினார்கள். அவர்கள் குறிப்பிட்ட, அல்லது குறிப்பிட விரும்பிய குமுகாயப் பகைவர்கள் யார்? அவர்களுக்கு ஒப்போலை உரிமை இல்லையா? அவர்களுடைய ஒப்போலைகளையும் சேர்த்துப் பெற்றுத்தானே இவர்களும் ஆட்சிக்கட்டில் ஏறினர். திரு. பக்தவத்சலம் காலத்தில் 'இந்தியெதிர்ப்பு மறவர்களாகக்' காட்சியளித்தவர்கள் எல்லாரும் இவர்கள் காலத்தில் குமுகாயப் பகைவர்களாக மாறிக் காட்சியளிக்கின்றனர் போலும்! அவர்கள் குமுகாயப் பகைவர்கள் என்றால் அவர்களுக்கு எதற்குக் குடியுரிமை? கிளிகளின் ஆட்சியில் வல்லூறுகளுக்கு குடியுரிமை கொடுக்கப் பெறுவது பிழையில்லையா? தம் தம் அதிகார நிலைப்புக்காக-தாம் பேசும் எந்தப் பேச்சையும் எந்த அறிக்கையையும் வானொலியும், செய்தித் தாள்களும் பறைசாற்றுகின்றனவே என்று எதை வேண்டுமானாலும் பேசிவிடுவதா? அல்லது எழுதிவிடுவதா? அப்படியே அவர்கள் குமுகாயப் பகைவர்கள் என்று வைத்துக் கொண்டாலும், அவர்களுக்கு மட்டும் தாய்மொழிப் பற்றிருக்காதா? இந்தி எதிர்ப்புணர்ச்சி இருக்காதா? திரு. பக்தவத்சலம் அடித்துக் கிழித்தெறிந்த அரசியல் முரசையே இவர்களும் ஒலித்துக் காட்டுவதற்கா இவர்கள் அரசுக் கட்டிலேறினர்? சீனப்புரட்சி, பிரஞ்சுப் புரட்சி பற்றியெல்லாம் வாய்கிழியப் பேசிப் பேராயக் கட்சியை இறக்கிவிட்ட இவர்கள், ஒடுக்கப்பெறும் மக்களின் ஓரெழுச்சியை-உள்ளுணர்வைக் குமுகாயப் பகைவர்களின் எழுச்சி என்று வண்ணித்துக் காட்டுவது மட்டும் ஏன்?

இவற்றோடன்றி இக்கால் நடந்த இந்தியெதிர்ப்புக் கிளர்ச்சி இன்னோர் அரசியல் வேடிக்கையையும் நடத்திக் காட்டியுள்ளது. அது தான் இந்தியெதிர்ப்பின் அரிமாவாகிய பெரியாரே, இராசாசியிடம் மூளைத்திறத்திற்குக் கையேந்தியது. இந்தியைத் தென்னாட்டுப் படிக்கட்டில் அடியெடுக்க வைத்ததே இராசாசிதான் என்று தடியெடுத்தாடிய பெரியார், இன்று இராசாசியைப் போய் இந்தியை எதிர்க்க அழைப்பு விடுப்பதும், அண்ணாத்துரை அவர்கள் அவரை இந்தியெதிர்ப்புக்குத் தலைமைதாங்கக் கூறுவதும் ஏன்; தங்கட்குக் கையாலாகவில்லை என்பதாலா? அல்லது இராசாசி தங்களைவிட அறிவாற்றல் மிக்கவர் என்பதாலா? அவ்வழி நடந்தால் உள் எதிர்ப்பை ஓரளவு குறைத்துக்கொள்ளலாம் என்றால், பேராயக் கட்சியின் கடைவாயிலில் நின்று படியிறங்கக் காத்திருக்கும் திரு. காமராசரையும் அவர்கள் அழைத்து, எச்ச தொச்சம் உள்ள எதிர்ப்பையும் குறைத்துக் கொண்டிருக்கலாமே! சந்துவரை வந்த தலைமுக்காட்டுக்காரி, சந்தை வரை வருவதில் என்ன வெட்கம் வந்து விட்டது? பொதுநிலையில் மானம் கருதுவது தவறு என்பது பெரியார் நன்கு விளக்கிய கருத்துத்தானே. இவ்வாறெல்லாம் செய்ய விடாமல் ஒருவேளை இராசாசியே தடைக்கல்லாக இருக்கலாம். இந்தி நுழைப்பின் முதல் படலத்தை எழுதிய இராசியே இந்தியெதிர்ப்பின் இறுதிப் படலத்தையும் எழுதித் தமிழக வரலாற்றில் அழியாத ஓர் இடத்தைப் பிடித்துக்கொள்ள இராசாசி அவர்கள் அமைத்துக்கொடுத்த சூழ்ச்சி நாடகம் போலும் இது! அவ்வாறன்றி ஒருவேளை இவர்கள் இராசாசி அவர்களையே ஆட்டக்காயாக எண்ணிக்கொண்டு பாண்டவ, கௌரவக் கரவாட்டம் ஆடுவதாக வடநாட்டினர்பால் ஓர் அரசியல் கவறாட்டம் நடத்த எண்ணியிருப்பார்களானால், இவர்களுக்குக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன், திரு. இராசாசியிடம் அது நிறைவேறாது. பெரியார், அண்ணாத்துரை இனமாகிலும் பாரத இராமாயணம் படித்த இனம். திரு இராசாசி அவர்களோ பாரத இராமாயணம் எழுதிய இனம். அவர்களுக்கு இத்தகைய அரசியல் கவறாட்டங்கள் எல்லாம் பொழுது போக்கு; திரை மறைவு விளையாட்டு! இவை பண்டைய வரலாறுகளால் மெய்ப்பிக்கப் பெற்றுள்ளன.

போராடுவது, சிறைபோவது, உதைபடுவது, உயிர்விடுவது தமிழினம்! அவற்றிற்குக் கட்டியங்கூறிப் பட்டயம் தீட்டிக்கொள்வது ஆரியப் பார்ப்பனவினமா? தூ... தூ... எத்தனை நாளைக்கு இந்த அடிமை மனப்பான்மை? தமிழரின் கொள்கை நாடிதான் தளர்ந்து போனதா? அல்லது உணர்வுச் சூடுதான் ஆறிப்போனதா? அன்றித் தலையெடுத்து வரும் தமிழ்மானந்தான் அரசியல் மணலில் சுவறிப்போயிற்றா? பேசுவது பாண்டிய சோழ சேரரின் வெற்றி வரலாறு; நடப்பது மனு, சுக்கர, சாணக்கிய சங்கராச்சாரிகளின் சூழ்ச்சிக் கரவாறு. பெரியார் நடுவணரசுக்கு வெளிப்படையாக அறிவித்துவிட்டு இந்தியெதிர்ப்புக்குத் தலைமை தாங்கினால் என்ன? ஒரே வரியில் இந்தியை எடுத்து இந்திக்காரனின் முகத்தில் விட்டெறிந்துவிட்டு, ஒன்று, நீ இதை மூட்டைகட்டி மூலையில்

போடுகிருயா? அல்லது நாட்டைப்பிரித்துக்கொள்ள நான் நாள் குறிக் கட்டுமா என்று கேட்டால் எந்தப் பட்டாளம் வந்து பட்டாக்கத்தியை உருவி வெட்டு வெட்டென்று தமிழரை வெட்டித்தள்ளிவிடும்? நமக்கு இருக்கும் உரிமைகள் இரண்டு. ஒன்று வாழ்வுரிமை, இரண்டு சாவு ரிமை. ஒன்றில்லையாளுல் ஒன்றை மேற்கொள்ளுவதில் என்ன பிழை?

மக்கள் திரு. அண்ணுத்துரையை நம்பி ஆட்சியை ஒப்படைத்த னரா அல்லது இராசாசியை நம்பி ஆட்சியை ஒப்படைத்தனரா? திரு. இராசாசியையும நம்பித்தான் ஆட்சி ஒப்படைக்கப்பட்டது என்றுல், மக்கள் நம்பிக்கையில் பொதுவுடைமையர் இடம் பெறவில்லையா? முசு லீம்லீக் இடம்பெறவில்லையா? நிகரமைக்கட்சிசார்ந்து நிற்கவில்லையா? மாணவர்தம் எழுச்சியைக் கண்டு இப்படி எண்ணெயில் விழுந்த பண் ணியமாய்ச் 'சளபுள' வெனக் கொதிப்பதும், இருப்புச் சட்டியில்போட்ட எள்ளும் சோளமுமாய் 'சடபுட' வெனப் பொரிந்து தள்ளுவதுமான இராசாசி, ஆட்சி மொழிச் சட்டவரைவு தீர்மானமாக்கப்படும்வரை என்னசெய்து கொண்டிருந்தார்? 'கல்கி'யில் 'பாரதக்' கட்டுரை எழுதிக் கொண்டிருந்தாரா? அல்லது வியட்நாம் போரை ஒடுக்கப் போனுரா? இல்லை இசுரேலிய அராபியரின் சூயசுக் கால்வாய்க் கதவை திறக்கப் போயிருந்தாரா? பள்ளிப்பிள்ளைகளின் உள்ளக்கொதிப்பைக் கண்டபின் அவர்களுக்குத் தலைமை தாங்க நான், நீ என்று முந்திக்கொள்ளும் சாணக்கிய தந்திரம் சந்திரகுப்தன் காலத்தில் நடந்திருக்கலாம்; இன் றைய மாணவ மறவர்களுக்குத்தலைவரும் வேண்டியதில்லை; வழிகாட்டி யும் தேவையில்லை; அவர்களிடையில் கருத்தாளர்க்கும் வேலையில்லை. எனவே இராசாசியின் இந்தி நுழைப்பு மூளை, இந்தியெதிர்ப்புக்குத் துளியும் வேண்டப்படுவதில்லை.

இந்தியெதிர்ப்பில் இதற்குமுன் எத்தனையோ எழுச்சிகள் இருந்தன. ஆனுல் வரலாறுபடைக்கும் வகையில், இலக்கியம் பாடும் வகையில் மாணவர்களே இந்தியெதிர்ப்பு வல்லாண்மைக்குக் கொதித்து நின்ற வகையில் இஃது இரண்டாவது எழுச்சி. அடுத்து வரும் மூன்றுவது எழுச்சியைத் தடுத்து நிறுத்த இந்திரா இல்லை; இராசாசி போன்றவர் களே ஆயிரக்கணக்கானவர் வந்தாலும் பயன்படப் போவதில்லை என் புதை அண்ணுத்துரை, பெரியார், இராசாசி, காமராசர், இந்திரா உள் ளிட்ட அத்தனைப் பேர்களும் நினைவில் வைத்துக் கொள்க. ஒரு நாட் டின்-ஓரினமக்களின் சரியானதோர் உள்ளுணர்வைத் தடுத்து நிறுத்

தும் போராற்றல் எந்த ஒரு நாட்டின் அதிகாரத்தாலும் முடியாது என்பது இயற்கை எழுதிய சட்டம். அச்சட்டத்தின்கீழ், இந்திரா, மொரார்சி, சவாண் போன்றவர்கள் எழுதிக்கொள்ளும் சட்டம் தவிடு பொடியாகிவிடும் என்று எச்சரிக்கின்றேம்.

இறுதியாக ஒன்று. இந்திய நாட்டின் ஒற்றுமை வெளிநாட்டு அரசியல் பூசல்களுக்காகச் சிறிது காலத்திற்காகவேனும் நிலைநிறுத்தப்படவேண்டுமானுல் இந்தியை ஆட்சிமொழியாக்கும் துடுக்குத்தனம் -பதற்றத்தனம் தமிழகத்தைப் பொறுத்த அளவிலேனும் அறவே கைவிடப்பட்டாக வேண்டும். தமிழர் எந்த அரசியல் மூளிக்கும் அடிமையாக இருக்க ஒப்பார்; ஒப்பார்; ஒப்பார்! அவரினத்தில் பிறந்த புறந்தோன்றிகள் சிலர் அவ்வாறு அடிமைப் பட்டயம் தீட்டித்தர ஒப்புவார்களானுல், அத்தகைய அடிமை, அநும, வீடணப், பிரகலா தன்களை வேண்டுமானுல் சேத் கோவிந்ததாசும், விபூதி மிசராக்களும் தங்கள் தங்கள் தொடைகளில் தூக்கி வைத்துக் கொள்ளட்டும்; நமக்குக் கவலையில்லை. ஆனுல் ஒருசில பழுதைகளுக்காக இங்குள்ள தமிழர் எல்லாரும் இந்தியைச் சுமக்கும் கழுதைகளாக மாறத்தான் வேண்டும் என்பதில் அறமும் இல்லை; பொருளும் இல்லை; இன்பமும் இல்லை. துன்பம்! துன்பம்! சாக்காட்டுத் துன்பம்! அதற்குச் செத்தொழிவதே பலவாற்ருனும் மேல்! மேல்! மேல்!

மேலும் தங்களின் இந்தியெதிர்ப்புணர்வைக் காட்ட எரியூட்டுவது, பள்ளிநிறுத்தம் செய்வது, பொதுப்பொருளுக்குச் சேதம் விளைவிப்பது முதலிய பண்பாட்டுக் குறைவான செயல்களில் ஈடுபடுவது தமிழர் தன்மைக்கே இழிவுதர வல்லது என்று இராசாசி போன்றவர்கள் கருத்தறிவித்துள்ளனர். அவர்களை நாம் கேட்கின்றேம். எது பண்பாட்டுக் குறைவான செயல்? எது தமிழர் தன்மை? குட்டக் குட்டக் குனிந்து கொடுக்க வேண்டும் என்பதா? இல்லை, அடிமையாய்க்கிடந்து பன்னூருண்டுக்காலம் அறம், அறம் என்று வந்தவர்க்கெல்லாம் படியளந்துவிட்டு, இறுதியில் தான் பிறரிடம்போய் மடியேந்திக்கொண்டு தெருவில் நிற்கிருனே தமிழன், அதுபோல் இன்னமும் இருந்து இதனினும் தாழ்ந்துபோக வேண்டும் என்பதா? இவற்றில் எஃது ஐயா தமிழ்ப்பண்பாடு? தமிழர் அறம்? அறக்களம் பாடிய அதே தமிழன் தான் மறக்களத்தையும் பாடி வைத்துள்ளான். அறத்திற்கே சார்பில்லை தமிழன்; மறத்திற்கும் துணை என்று தமிழர் இலக்கியம் பறைசாற்றுவதை நீவிர் உணரவில்லை போலும்!

தமிழர் கூட்டத்துள் புகுந்து கொண்டு, தமிழ்ப் பண்பாட்டுக்குப் புதிய அடிமை இலக்கணம் எழுதத்துடிக்கும் உன் உடம்பில் எதற்கு இன்னும பூணூல்? உனக்கெதற்குக் குடுமி? உனக்கெதற்குக் கோவணக்கட்டு? நீ மட்டும் ஏன் உயர்வு என்று பேசிக் கொள்கின்றாய்? நீ மட்டும் கோயில் கருவறைக்குள் நுழைவது ஏன்? நீ மட்டும் எதற்காக மக்களை நூற்றுக்கணக்கான 'சாதிப்' பெயர்களை இட்டு அழைக்கின்றாய்? உனக்கு எதற்காகத் தருப்பைப்புல்லும் விளக்குமாறும? இவையெல்லாம தமிழ்ப் பண்பாடா? அல்லது தமிழரின் தன்மைகளா? இவற்றைக் கொண்டுபோய்த் தமிழனின் இலெமூரியாக் கண்டத்தை எடுத்து விழுங்கிய பசிபிக் மாக்கடலில் தள்ளிவிட்டு வாரும்; பின்பு பேசுப! அதன்பிறகு நாமிருவரும் ஒற்றுமை பாராட்டுவோம்; பேசுவோம்; ஒரே நீரில் குளிப்போம்; ஒன்றாய் உண்டு களிப்போம். அது வரைத் தமிழ்ப் பண்பாடு பற்றியும், தமிழர் தன்மை பற்றியும் உன்னையும் சேர்த்துக்கொண்டு பேசுவதற்கு உனக்கென்ன தகுதி இருக்கின்றது? உன்னைத் தமிழன் என்று எந்த மடயன் சொன்னான்?

இனி, அண்ணாத்துரைக்கு ஒன்று. ஐயா, முதலமைச்சர் அவர்களே! உலகில் எந்த் நாட்டு வரலாற்றில் பொருள் சேதமின்றி, ஆள் சேதமின்றி அந்த நாட்டு மக்களால் அவர் தம் உரிமையைக் காத்துக் கொள்ள முடிந்தது? நிலைநிறுத்த முடிந்தது? அந்த நாட்டின் பெயரைக் கொஞ்சம் சொல்கின்றீர்களா? ஒருவன உரிமையைப் பறிக்கும் இன்னொருவன் உள்ளவரை இவ்வுலகில் போராட்டமும் ஓயப்போவதில்லை; ஆள் சேதமும் குறையப போவதில்லை. இன்னொரு நூரியினுடைய மொழியை நாம் கற்றுத்தான ஆகவேண்டும் என்பது நம் உரிமையைப் பறிப்பதாகாதா? இவற்றைத் தெள்ளத்தெளிவாக உரைக்க ஏன் ஐயா உங்களுக்கு நடுக்கம?

இறுதியாக ஒன்று; இந்திபின்நிலை இப்படியேதான் இருக்குமென்றால் தமிழகம் பிரிவதும் இமிழ்கடல் போலும் உறுதி! உறுதி! அந்தப பிரிவினை கேட்டுத் தமிழர் பொங்கும் நாள் சேய்மையிலில்லை; அந்த நல்லநாள் விரைவில் வருவதாகுக! அடுத்த மூன்றுவது இந்திப் போர் நடக்குமானால் அது வெறும் மொழிப் போராட்டமாக மட்டும் இருக்காது; தமிழக விடுதலைப் போராட்டமாகவும் இருக்கும் என்பதை இந்திய அரசுக்கு எச்சரிக்கையுடன் கூறிக்கொள்கின்றோம். இந்திரா காந்தியின எச்சரிக்கைகளும் அச்சுறுததல்களும் மக்களாட்சியின் கொழுந்தன்று; தனியாராட்சியின் பழுத்த இலைகள்; எனவே அவற்றைப் பயன்படுத்தித் தேசிய ஒற்றுமை என்ற கதம்ப மாலையைத் தொடுத்துவிட முடியாது. இஃதை அரசினர் உன்னிப்பார்க்கட்டும்.

–பெருஞ்சித்திரன்.

உலகத் தமிழ் மாநாடு பற்றிய கருத்துரை-அடுத்த இதழில்!

இலக்கியம்

நூறாசிரியம்

துரை-மாணிக்கம்

பாட்டு: க.

விழைவே வேண்டலின் நனிகுறை வினதே!
பிழைப்பே வழுக்கிலா முறைபிறழ் விலதே!
உழைப்பே தமிழ் கமழ் உள்ளத் தூன்றியோ
ரிழைபுறஞ் செல்லா நிலைபொருந் துதலின்
இழிவழிப் பொருட்குப் பழிகாண் பதுவே!
காதற் பூணலாக் கடுகிழை பூணு
ஆதுணை புரக்குங் குடும்போ பெரிதே!
வரவே யொருமுழப் பீறல் வரைத்தே!
நிரப்பே நெடுந்தொளை வாடையி னேர்த்தே!
வாழ்வே நளிர்த்த வல்லிருள் முயக்கில்
கூனித் தாழ்ந்த கூரையு ளோதத்து
முழத்துணி மெய்ம்மேன் முன்னும் பின்னும்
இழுத்திழுத் தழுங்கு மியல்பி னொத்தே!
உறவே பொருட்குக் கையகன் றேந்திக்
குறையக் கரையும் புரைகாய் வதுவே!
அயலே குய்ப்புகை பிறமனை யணுகா
தியங்குதாழ் செறிக்கு மியல்பின தளியே!
ஊரே ஆளுநர்க் குளங்கவ லாது
சீர்மை நூறும் சிறுமைத் ததுவே!
ஈங்கிவ் விடையிலெம் உயிரே
போங்குறி யறியாக் கானீர்ப் புணையே!

பாட்டு: க

பொழிப்பு:–

எம் விருப்பம் எமக்குற்ற தேவையினும் மிகக் குறைவினது. எம் பிழைப்பு வழுக்கலிலாத நெறிமுறையிற்பிறழ்ச்சி ஏதும் இலாதது; எம் உழைப்பு தமிழ் கமழ்கின்ற உள்ளத்தே ஊன்றி, ஓர் இழைதானும் புறத்தே செல்லாத நிலையிற் பொருந்துதலின் இழிந்த வழி வரும் பொருளுக்குப் பழிகண்டு விலகும் தன்மையது; அன்பு எனும் அணிகலனன்றிப் பிறிதோர் அணியைக் கடுகளவுதானும் பூணுகிலாத, எமக்கு ஆய துணைவி புரந்துவரும் குடும்பமோ பெரிது. எமக்கு வரும் வரவோ கிழிசல் உடைய ஒருமுழப் பீறல் போன்றது. எமக்குற்ற வறுமையோ, நெடிது தொளைக்கின்ற வாடைக்காற்றைப் போன்றது. இவற்றால் யாம் வாழும் வாழ்வோ, குளிர்பொருந்தி வலிந்த இருளால் முயங்கப் பெற்ற கூரை கூனிய தாழ்ந்த குடிலுள், ஈரங் கசிந்த ஓதத்துள், உடல் போர்த்தப் பற்றாத ஒரு முழத்துணியை முன்னும் பின்னும் இழுத்திழுத்துப் போர்த்தி வருந்திக் கிடக்கும் தன்மை போன்றது. எமக்குற்ற உறவினர்களோ பொருளுக்கென கைகளை அகன்று ஏந்தி, அது நிறையா விடத்துப் பலவாறு குறை கூறிக் காய்கின்ற தன்மையினர். எம் அயலகத்தாரோ, தம் மனையில் தாளித்து செய்யும் மணப்புகை தானும் பிறமனையுட் புகாவண்ணம், தம் திறந்த கதவம் தாழால் நெருங்க முடுக்கும் இயல்பை உடையவர். யாம் வாழும் ஊரோ, தம்மை ஆளுகின்றார் பற்றிக் கவலாது பெருமையைப் பொடியாக்கும் சிறுமைத்தது. இவை தமக்கிடையில் எம் உயிர், போகின்ற வழி அறியாத ஆற்றுநீரின் தெப்பத்தைப் போன்றது.

விரிப்பு:

இப்பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

தம் மனமும் அது கொண்ட விழைவும், அவ் விழைவு புரக்கும் குடும்பமும், அக் குடும்பு பெற்ற வறுமையும், அவ்வறுமை தாக்கும் கொடுமையும், அக்கொடுமை மிகுக்கும் உறவும், அவ்வுறவு சார்ந்த அயலும், அவ்வயல் நிரப்பிய ஊரும், அவ்வூர் நிரம்பிய மக்களும், அம்மக்களிடை தம் உயிர் செல்லும் செலவும் கூறுவதாக அமைந்தது இப் பாட்டு.

உயிர் பற்றுக் கோடாகக் கொள்வது மனத்தையே ஆகலின் மன வுணர்வு முதற்கண் கூறப்பெற்றது- மனம் வேட்கையுருது பற்றற் றிருக்கும் அளவை, அது தானுற்ற புற வாழ்க்கைக்கு வேண்டிய உலகியற் பொருள்மேல் அவாவுதலின் தன்மை வழிக்காட்டப்பெற்றது.

விழைவு:- மனத்தேவை. வேண்டல் – புறத்தேவை. புறப் பொருளை அவாவுதலையே 'வேண்டுதல்' என்று வள்ளுவரும் குறித்தார். புறத்தேவையினும் அகத்தேவை குறைந்து நிற்றலே, மெய்யுணர்வு மிகுக்க வழிசெய்யு மாகலின், விழைவே வேண்டலின் நனிகுறை வினதே எனக் கூறலாயிற்று.

பிழைப்பு:– உலகியல் வாழ்வு உயர்வையே குறித்த ஒழுக்கம், நாற்றம், காமம் முதலிய சொற்கள் தீயொழுக்கம், தீநாற்றம், இழி காமம் எனக் கீழ்மைப் பொருள்களுக்கும் ஒட்டிவரத் தொடங்கிய இழிந்த நிலையில், கெடுதல், தவிர்தல், தவறல் முதலிய இழிநிலைப் பொருள்களே பெறும் பிழைப்பு என்ற சொல்லும் உலகியல் வாழ்வைக் குறிக்கும் ஓர் உயர்ந்த் சொல்லாக உயர்வுபெற்றது.

பிழையின்றி உலக வாழ்வியலா நிலையில், பிழைப்பே வாழ்வு என்னும் பொருள் பெற்றது. எனவே உலக வாழ்வியலைக் குறிக்க இச் சொல்லே கையாளப் பெற்றது. இச் சொற்பொருள் அண்மைக்காலத் தது.

வழுக்கிலா முறை பிறழ்விலது: மேலேறுதல் இல்லாவிடத்தும் கீழ்ச்சறுக்குதல் இல்லாவொரு நிலைக்கு ஊற்றுக்கோலாக நிற்கும் நெறிமுறையில் பிறழ்ச்சி இலது.

உழைப்பு:- உடல் வருத்தம், வருந்துதல் என்னும் பொருளடி யாகப் பிறந்து அவ்வருத்தம் செய்யும் உடல் முயற்சியைக் குறிக்கும் பிற்காலச் சொல்.

உள்ளம் தமிழின்பத்துத் தலைப்படின் ஓர் இழைதானும் புறம் செல்லாது. அவ்வுணர்விலேயே நிலைபெறும் என்பதால் உள்ளத்து ஊன்றி ஓர் இழைபுறஞ் செல்லா நிலைபொருந்துதல் எனப் பெற்றது. அவ்வாறு பொருந்திய விடத்து, இழிவான வழிகளில் ஈட்டப்பெறும் பொருளுக்குப் பழிகண்டு விலக்கும் பான்மை பெறுதலின், இழிவழிப் பொருட்குப் பழி காண்பது எனலாயிற்று

இழிதல்-மேல்நின்று கீழிறங்குதல். உயர்வான நிலையினின்று உள்ளத்தைக் கீழ்நிலைக்குத் தாழ்த்துதலால் இழிபொருள் எனப்பெற் றது.

காதலன்பு உளத்தை இறுகப் பற்றுதலின் காதற் பூண் எனப் பெற்றது. கடுகிழை - கடுகத்துணை இழை. ஆதுணை - ஆகிய துணை, வினைத்தொகை - மனைவி. புரத்தல் - பராமரித்தல், காத்தல்

குடும்பு- குடும்பம் குழும்பு என்ற சொல்வேர் அடியாகப்பிறந்த சொல். கலவு-குலவு-குழவு-குழம்பு-குழும்பு-குடும்பு. குடி என் பெய ரடியாகப் பிறந்த சொல் எனினும் வழுவின்றும்.

பீறல்- கிழிந்த துணி - கந்தை.

நிரப்பு- சான்றோர் வறுமை-விளக்கம் முற்கூறப் பெற்றது.

உடலையும்' எலும்பையும் தொளைத்து ஊடுருவிச் செல்வது போலும் குளிர்ந்த வாடைக் காற்றுகையால் தொளை வாடை எனப் பெற்றது. இனி அது நீடுதல் பற்றி நெடுந்தொளை வாடை எனப் பெற்றது.

நேர்த்து- நேரது - சமமானது.

நளிர்- குளிர்-'நள்' ளென் அடியாகப் பிறந்த சொல்.

நள்- நெருக்கம், செறிவு; உடல் குளிரால் நெருக்கமுறுதல் பற்றி நளி என்பது குளிர்மையைக் குறிக்கும். அணுக்கள் சூட் டால் விரிவடைதலும், குளிரால் நெருக்கமுறுதலும் ஆகிய இன் றைய வேதியல் அறிவுக்கும் பொருத்தமாக இச்சொல் அற்றைக் காலத் தமிழ் மொழியில் பொருள் பொதி சொல்லாக அமைந் திருத்தல் காண்க. நள் + து ≈ நடு-நடுக்கம்; அணுக்கள் நெருக்க முறுதலால் ஏற்படும் அலைவு. நள் + பு ≈ நட்பு-உயிர் நெருக்க முறுதல்

முயக்கம்- சேரத் தழுவுதல்.

கூனித்தாழ்ந்த- வளைந்து தாழ்வுற்ற.

ஓதம்- வெள்ளம் - வெள்ளக் கசிவு.

'ஒள்'லென் வேரடியாகப் பிறந்த சொல்.

ஒள்-வெண்மை-ஒளி-ஒளிர்தல். (வெண்மை உள்ளது ஒளிர்தலும், ஒளியுடையது வெண்மையாயிருத்தலும் ஓர்க்க). ஒள் + து; ஒது-ஓது ஓதுதல்-ஓசையிடுதல்-ஆரவாரித்தல் ஓது-ஓதை-ஆர வாரம்-ஓசை. ஓதை-ஓதம். தண்ணீர் ஒளிபெற்று விளங்குதலும், பெருத்த ஓசையுடன் செலவு மேற்கொள்ளுதலும் ஆதலின் அதற்கு ஓதம் என்ற ஒரு காரணப் பெயர் தோன்றிற்றென்க.

நீர்க்கசிவு பெற்றுத் தாழ்ந்த கூரைக் குடிலுள் தொடர்ந்து குளிரும் மண்டிய இருட்போதில், உடலைப் போர்த்துதற்காகாத ஒருமுழத் துணியை முன்னுக்கும் பின்னுக்கும் இழுத்திழுத்து மூடுதலால் ஏற்படும் துயரத்திற் கொப்பான எம் வாழ்க்கை எனப் பெற்றது.

கையகன்று ஏந்தி- கைகளை அகல விரித்தபடி ஏந்தி.

குறையக் கரையும்- குறையுங்காலை ஒலிப்பட ஆரவாரித் தல் செய்யும்.

புரை காய்வது- குறைநிலைகளைத் தம்முட்கனன்று காய்வது.
குய்ப்புகை- தாளிதப் புகை.
தாழ் செறித்தல்- கதவைத் தாழிட்டு நெருங்க முடுக்குதல்.
இயல்பினது- என்றும் இயல்பான தன்மையுடையது.

அளியே- இரங்கத் தக்கது!

தம் மனையில் சமையல் செய்யுங்கால் எழும் இனிய தாளிதப் புகையும், அண்டை வீட்டினர் தம்வயின் செல்லுதல் கூடா தெனத் தடுக்க, தம்வீட்டுக் கதவினைத் தாழால் நெருங்க முடுக்கி யடைக்கும் இரங்குதற்கரிய இயல்பான தன்மையை உடைய அயலார்என்றபடி.

இரங்குதல் அவர் எளிய மனப்பண்பு குறித்து என்க.

ஆளுநர்க்குளம் கவலாது- தம்மை அரசியலால் ஆளுதல் பொறுப்புப் பெறுவார் தம் அறிவு, பண்பு, அறன், நடுவுநிலைமை, தறுகண், கொடை முதலியன பற்றிக் கவலுறாது எவரேனும் ஒரு வர் ஆளுதலுக் கியைந்து நிற்பது.

உளங் கவலாத்தன்மை கல்வியறிவுக் குறைவானும்; அரசி யல் அறிவுக்குறைவானும், பொதுமை யுணர்வின்மையானும் ஏற் படுவது.

சீர்மை நூறும்- சிறுமை-செப்பமான உயர்ந்த தன்மைகளை அழித்துக் கொள்ளுதலாம் இழிந்த தன்மை.
ஈங்கிவ் விடையிலெம்...புணையே- என்றது ஈங்குக் காட்டிய இத்துணைத் துயர் சான்ற நிலைகளுக்கிடையில் எம் துணுக்குறும்

சொற்சிறப்பு

ப. தாயம்மாள்,
தமிழ்த்துறை, கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.

சான்றோன்:-

புறம் 312-ஐப் படித்திருப்பீர்கள். 'சான்றோன் ஆக்குதல் தந்தைக் குக் கடனே' எனும் அப்பாட்டடியிலுள்ள 'சான்றோன்' என்ற சொல் லின் பொருள் யாது? நாம் வழக்கமாகக் கூறும் சிறந்த பண்பு களுடையவன் என்பதா? அன்று என்று தன் ''எந்தச் சிலம்பு" என்ற நூலில் மறுக்கிறார் பண்டாரகர் வ. சுப. மாணிக்கனார். புதுப்பொருள் யாது? இதோ.

சான்றோர் என்னும் கிளவி மறவரையும் கழகக் காலத்தில் குறித் தது. இப்பொருள் உண்டு என்பதை நாம் மறந்துவிட்டோம். அத னால் சான்றோன் என வந்த பல கழகநூல் அடிகளுக்கு உண்மைப் பொருளைக் காணத் தவறிவிட்டோம்.

எழுமுடி கெழீஇய திருஞெமர் அகலத்து
நோன்புரி தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை [பதி-14]

கொலக் கொலக் குறையாத் தானைச் சான்றோர் [பதி-82]

தேர்தர வந்த சான்றோர் எல்லாம் [புறம்-63]

அமரின் இட்ட அருமுள் வேலிக்
கல்லென் பாசறைப் பல்சான்றீரே [புறம்-31]

(முன்பக்கத் தொடர்ச்சி)

உயிர், எத்திசை போகி இத்தரை கடப்பது என்றறியாது காட் டாற்று வழிச்செல்லும் புணைபோன்றதாம் என்பது.

இப்பாட்டு, நாட்டுநிலை குலைந்தநிலையில் மக்கள்நிலை தாழ்த லும், மக்கள் நிலை தாழ்ந்த நிலையில் நாடு திருவிழந்து வாடுத லும், அதன் வழிச்சான்றோர் தமக்குற்ற துயரையும் பொருட்டாக நினையாது, நெஞ்சங் கவலுதலும், உயிர் அழுங்குதலும் கூற வந்த பாடலாகும்.

இது பொதுவியல் என் திணையும், பொருண்மொழிக் காஞ்சி என் துறையுமாம். (வளரும்)

மேற்காட்டிய நான்கு இடங்களிலும்சான்றோர் என்பதற்கு மறவர் என்ற பொருள் வெளிப்படை. கழக இலக்கியத்துப் பல இடங்களில் மறவர் எனப் பொருள் கொள்ளுவதற்கு இடமுண்டு. பெற்ற மகன் நாட்டின் மறவனாகச் சாவதே தமிழ்க்குடித் தாய்க்குப் புகழ் தந்தது. பெற்று வளர்த்த மகனைச் சான்றோன் ஆக்குதல் (மறவனாகச் செய்தல்) தந்தையின் கடமை. அவனுக்குக் கூரிய வேல் கொடுத்தல் கொல்லன் கடமை. அவன் கடமை போர்க்களத்தில் படையிற் சிறந்த யானையை வெட்டி வீழ்த்தி வெற்றியொடு வீட்டுக்கு வருதல் என்பது பொருளாகும்.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய் [69]

என்ற குறளில் 'சான்றோன்' என்பதற்கு மறவன் என்று பொருள் கோடலே பொருந்தும்.

களிறெறிந்து பட்டனன் என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே. [புறம்-277]
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே. [புறம்-278]

என்ற புற அடிகளால் தான் பெற்றமகன் தானிருக்கும் போதே மறவனாக இறந்தான் என்ற மறச்சாவைக் கேட்ட தாய் ஈன்ற ஞான்றினும் பேருவகை அடைந்தாள்-எனக்கருத்து புலனும். புறநானூற்றுப் பாடல்களும் திருக்குறளும் ஈன்ற ஞான்றினும், ஈன்ற பொழுதின் எனவும், உவகை பெரிதே, பெரிது உவந்தனளே, பெரிதுவக்கும் எனவும் ஒன்றுபோல் சொல்லாட்சி செய்தலைக் காண்க. இவ் வொற்றுமையைக் காணும்போது 'சான்றோன் எனக் கேட்ட தாய்' என்பதற்கு-மறவன் எனக் கேட்ட தாய் என்று பொருள்படுகின்றது.

நன்னடை!- நன்னடை என்பதற்கு ஒழுக்கம் என இடைக் கால முதல் நாம் பொருள்கொண்டுவருகிறோம். படைப்பயிற்சி என்பது இச்சொல்லின் பொருள். அடியெடுத்து வைக்கும் நடையொழுக்கிலிருந்துதான் படைப்பயிற்சி தொடங்குகின்றது. ஆதலின் நன்னடையாளர் எனப்படையாளர் பெயர் பெற்றனர். மறவன் கடமைக்குத் துணையான மறப் பயிற்சிக்கு நன்னடை என்று பெயர். ஆக, சான்றோன் என்பதற்கு மறவன் எனவும் நன்னடை என்பதற்குப் படைப் பயிற்சிஎனவும் பொருள்கூறுகிறார் பண்டாரகர் வ. சுப. மாணிக்கனார்.

என்னென் றுரைப்பேன்!

சேற்றில் நெளியுஞ் சிறுபுழுக் கூட்டமோ
காற்றிற் சுழலுஞ் சருகுக் கற்றையோ
பெருங்கடல் திரிதரு துரும்பின் திரளோ
நெருப்பிடை நெளியுஞ் சுரும்பின் படையோ
என்னென் றுரைப்பேன் ஏதொரு பயனும்
இன்றி நிலத்துக் கிருஞ்சுமை யாகத்
துன்னி உழன்று துஞ்சும் மாந்தரை!
இன்பமுந் துன்பமும் இன்னதென் றுணரா
தெல்லாந் தம்மாற் செய்தற் கியலும்
வல்லமை உண்டென வாய்ப்பறை சாற்றி
எண்ணம் போம்வழி எல்லாஞ் சென்று
மண்ணொடு மண்ணாய்க் கலக்கும் மாந்தரை
என்னென் றுரைப்பேன் எவ்வணஞ் சொல்கேன்!
மன்ற உலகத்து மன்னுதல் குறியாது
கொள்கை இல்லாக் குருடராய் அகத்தெழும்
உள்ளுணர் வழிக்கும் ஊர்வழி காண்பராய்த்
துன்பப் பொதியினை இன்பத் தொடையென
உன்னி மயங்குறும் உயர்விலா மாந்தரை
என்னென் றுரைப்பேன் எவ்வணஞ் சொல்கேன்!
முன்னோர் கண்ட முறையெலாந் தூற்றிக்
கண்டதே காட்சி கொண்டதே கோலம்
உண்பதே வாழ்வின் உறுபயன் என்று
பொறிகள் உய்க்கும் புலங்கள் நாடி
வெறிகொண் டுழுது தாமே விளைத்த
இயங்கிப் பொறிகளில் யாப்புற் றயர்ந்து
மயங்கி மாயும் மாண்பிலா மாந்தரை
என்னென் றுரைப்பேன் எவ்வணஞ் சொல்கேன்!
தன்னகத் துளதாம் தாழ்விலா இன்பம்!
இயற்கை சார்ந்த எளிய வாழ்வில்
உயர்ந்த இன்பம் ஊற்றாய்ப் பெருகும்!
தேவை சுருக்கிச் செய்வினை போற்றி
மேவுநல் லொழுக்க நெறிகளோம்பி
அறவழி ஈட்டிய பொருளால் அகத்தே
நிறைவு கொண்டு நேர்மையாய் வாழ்ந்தால்
மண்மிசை இருளை மாய்த்தெழு சுடர்போல்
உண்மை இன்ப ஒளிசிறந் தோங்கும்!
நூல்கள் தெரிக்கும் இத்தகு நுட்பச்
சால்புணரா து தத்தம் போக்கில்
தம்மை மறந்து தருக்குஞ் சழக்கரை
அம்ம என்னென் றுரைப்பேன் யானே!

- செவ்வேள் -

த. சலாவுத்தீன். அறி. இ, ஆ. ப.

உயிர்க்கொல்லிகள் (ANTIBIOTICS)

"கையில் வீக்கம், ஒரே வலி, தாங்கமுடியவில்லை, ஏதோ வண்டு கடித்தாற்போலிருக்கின்றது." என்று ஒருவர் மருத்துவரிடம் கூற, மருத்துவர் 'அப்படியா, பூஞ்சணிய (பெனிசிலின்) ஊசி ஒன்றைப் போட்டுக்கொள்ளுங்கள் வலி பறந்துவிடும்' என்பார். இவ்வாறு பூஞ் சணிய ஊசி மருந்து பலவாறு, பல நோய்களுக்குப் பயன்படுத்தப் படுகின்றது. இம் மருந்து ஒரே நாளில் கண்டுபிடித்ததன்று. பல் லாண்டுகள் ஆராய்ச்சியாளர்கள் பலர் கடினமாக உழைத்ததின் பலன் தான் இப்போது மாந்தர்க்கு உறுதுணையாகப் பயன்படும் பூஞ்சணி யம் (பெனிசிலின்) என்ற அரிய உயிர்க்கொல்லி.

சில மாதங்கள்முன் 'சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்' சென்னை மைய நூலகத்தில் ஒரு பாராட்டுக்கூட்டம் நடத்தினர். அங்கு அக்கழகத்தைச் சார்ந்த, மதுரையில் ஒரு பள்ளிக்குத் தலைமை யாசிரியராக இருக்கும் ஓர் அன்பர் "என்ன செய்து விட்டார்கள் இந்த ('Test tube விஞ்ஞானிகள்') ஆய்வுக் குழாய் அறிவியலார்கள், இந்த அறிவியல் அறிஞர்களால் என்ன நன்மை ஏற்பட்டு விட்டது. சிவனை நம்புவோர்க்கு இவர்கள் கண்டு பிடித்தவை ஒன்றும் தேவை யில்லை." என்று மிகவெறுப்புடன் அறிவியலார்களைத் தாக்கிப் பேசி னார். இப்பெரியவருக்கு நான் என்னத்தைச்சொல்ல! அதுவும் பட்டம் பெற்றவர்! தலைமையாசிரியர்வேறு! இப்படிப் பட்டவர்களால் மாண வக் குழுகாயமே கேடுறுகின்றது என்பது வெள்ளிடைமலை. ஆய்வுக் குழாய் அறிவியலாளர் மாந்தருக்காகச் செய்யாததென்ன? இக்கட்டுரை யில் தலைசிறந்த அறிவியல் அறிஞர் மாந்தருக்காகக் கண்டுபிடித்த பூஞ்சணியத்தைப்பற்றிக் காண்போம்.

மாந்தன் தோன்றிய நாளிலிருந்து, அவன் தன் வாழ்விற்காகப் பல போராட்டங்களை நடத்தினான். முதலில் உணவிற்காகப் போராடினான், பிறகு இடத்திற்காகப் போராடினான். (இவை இரண்டிற்கும் இன்றும் போராடுகின்றான்.) இவையெல்லாம் இருந்தும் தன் உடலில் புகுந்து உயிரை அணு அணுவாகச்சிதைக்கும் திறன்படைத்த நோய் நுண்ணுயிரி (Bacteria)களைக் கொல்லப் பெரிதும் போராடினான். போராடிக்கொண்டே இருக்கின்றான். வியப்பு என்னவென்றால் தன் உடலுக்கு ஒவ்வாத நோய் நுண்ணுயிரிகளைக் கொல்ல இன்னொரு வகை நுண்ணுயிரிகளைப் பயன்படுத்துகின்றான், இவற்றிற்குத் தாம் 'உயிர்க்கொல்லிகள்' (Antibiotics) என்று பெயர். இவ்வகை உயிர்க் கொல்லிகளைக் கண்டுபிடிப்பதில் பல அறிவியலார்கள் பங்கெடுத்துக் கொண்டனர்- அவர்களில் சிறந்தவர் அலெக்சாண்டர் பிளமிங் (1881-1955).

முதலில் பிளமிங் ஓர் அறுவை மருத்துவராக ஆகவேண்டும் என்று நினைத்தார். ஆனால் எதிர்பாராத வகையாக 'நுண்ணுயிரியலில்' (Bacteriology) ஈடுபட்டார். நுண்ணுயிரிகளை ஆராயும் இயலுக்கு நுண்ணுயிரியல் என்று பெயர்.

முதலில் பிளமிங் அம்மை குத்துவதைப் பற்றி ஆராய்ந்தார். அம்மை குத்துவதில், இறந்துபோன அல்லது வலிவில்லாத உயிரிகள் உடலுக்குள் செலுத்தப்படுகின்றன. இவை உடலுக்குள் சென்று நோயை உண்டாக்கும் உயிரிகள் பரவுதலைத் தடுத்து நிறுத்துகின்றன. இவ்வாறு அம்மை குத்துவதால் பெரியம்மை, நாய்க்கடிநோய் (rabies) நச்சுக் காய்ச்சல், தொண்டை அழற்சி நோய் ஆகிய நோய்களைத் குணப்படுத்துகின்றார்கள். 'போலியோ' (Polio) என்ற பிடிப்பு நோய்க்கு 'சாக்-சாபின்' (Salk and Sabin) என்ற அம்மைப்பால் பயன்படுத்தப்படுகின்றது. இதுமட்டுமல்லாது பலவகையான "குருதி நஞ்சு முறிப்பான்கள்" (antitoxins) இருக்கின்றன. குறிப்பிட்ட நோய் நுண்ணுயிரிகளை விலங்குகளின் உடலில் செலுத்துகின்றார்கள். அவ்விலங்குகளின் குருதி நோய் நுண்ணுயிரிகளை எதிர்த்துப் போராடும் நோய் எதிர்ப்பான்களை உண்டுபண்ணுகின்றன. இந் நோய் எதிர்ப்பான்களைக் குறிப்பிட்ட நோயுள்ள மாந்தனின் உடலில் செலுத்தினால் அவன் நோயினின்றும் நலமடைகின்றான். நோயை உண்டுபண்ணும் நுண்ணுயிரிகள் உடலில் எங்கு மையம் கொண்

டுள்ளனவோ அவ்விடத்தில் அறுவை செய்து நுண்ணுயிரிகளை அப்புறப்படுத்தியும் நோயை நீக்கலாம்.

''கார்பாலிக்'' அமிலம் போன்ற நுண்ணுயிரிக் கொல்லிகளைப் பயன்படுத்தலாம்; ஆனால் இவை உடலுக்குள் செலுத்தப்பட்டால் நோய் நுண்ணுயிரிகளை மட்டுமல்லாமல் நல்ல உடல் திசுக்களையும் கொன்று விடுகின்றன. நோயால் தாக்கப்பட்டவர் நல்ல உணவு உண்ணுவதின் மூலமும் நோயைக் குணப்படுத்தலாம்.

மேற்சொன்ன முறைகளெல்லாம் பழைய முறைகள். புதிய முறைகளை காணவேண்டும் என்று பிளமிங் அரும்பாடுபட்டார், மாந்தர்களின் கண்ணீரிலும் உமிழ்நீரிலும் 'இலைசோசைம்' (Lysozyme) என்ற ஒரு வேதியல் பொருள் இருக்கின்றது. இது நோய் நுண்ணுயிரிகளைக் கொல்லும் திறன் படைத்தது என்று 1922-இல் பிளமிங் கண்டார். ஆனால் அப்பொருள் பிளமிங் எந்த நோய் நுண்ணுயிரிகளைக் கொல்ல நினைத்தாரோ அவற்றைக் கொல்லவில்லை.

1928-இல் பிளமிங் 'இசுடாபைலோகோசி' (Staphylococci) என்ற நோய் நுண்ணுயிரிகளைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தார். இந் நோய் நுண்ணுயிரிகள் ஒருவகைக் கொப்புளங்களை உண்டுபண்ணுகின்றன. மற்ற பலவகைகள் பலவகையான நோய்கள் உண்டாவதற்கு காரணமாகின்றன. இந்நோய் நுண்ணுயிரிகளைப் பல மூடப்பட்ட தட்டுகளில் வைத்திருந்தார். நாளும் இவற்றை நுண்பெருக்காடிமூலம் பார்ப்பது வழக்கம். இவ்வாறு ஒருநாள் தட்டைத் திறந்து வைத்துப் பார்த்துக் கொண்டிருக்கையில் ஒரு சிறு துகள் ஒரு தட்டில் எதிர்பாராத வகையாக விழுந்துவிட்டது. இறுதியில் இந்த எதிர்பாராத நிகழ்ச்சி ஒரு சிறந்த மருந்தை மாந்தருலகுக்குக் காண தூண்டுகோலாக அமைந்தது

துகள் விழுந்த சில நாட்களுக்குள் அந்த குறிப்பிட்ட தட்டில் நீலமும், பச்சையும் கலந்த ஒரு பூஞ்சணம் (Mold) உண்டாகி இருப்பதை பிளமிங் கண்டார். இவ்வாறு தட்டில் புதிய பூஞ்சணம் அல்லது துகள் வீழ்ந்துவிட்டால் அதனை அப்புறப்படுத்திவிட்டு மீண்டும் புதிதாக ஆராய்ச்சியைத் தொடங்குவது

வழக்கம். ஆனல் பிளமிங் அவ்வாறு செய்யவில்லை. அதைக் கொண்டே தன் ஆராய்ச்சியைச் செய்தார். ஏனென்றல், அந்தப் பூஞ்சணத்தைச் சுற்றியுள்ள பகுதி தூய்மையாகவும், நோய் நுண்ணுயிரிகளின் வண்ணமில்லாமலும் இருப்பதைக் கண்டார். இவ்வாறு இருப்பதால் பூஞ்சணத்திலுள்ள ஏதோ ஒரு பொருள் நோய் நுண்ணுயிரிகளைக் கொல்லுகின்றது என்பதைத் தெரிந்து கொண்டார். அதனல் எவ்வகையான நோய் நுண்ணுயிரிகள் கொல்லப்படுகின்றன என்பதைக்காண முயன்றர்.

இதற்காக மிகுதியும் தூய்மையான பூஞ்சணத்தை உண்டாக்கினர். ஒரு விழுப்பொன் (Platinum) மூலம் சிறிது பூஞ்சணத்தை எடுத்துத் தனித்தட்டில் வளர்த்தார்- அது கரிக்கோல் (Pencil) போன்ற கிளைகளுடன் வளர்ந்தது. ஆகையால் அது 'பெனிசிலியம்' வகுப்பைச் சேர்ந்தது என்று கண்டார். இந்தப் பூஞ்சணத்திலிருந்து கிடைத்த சாற்றைப் பலவகையான நோய் நுண்ணுயிரிகளின் மீது செலுத்திப் பார்த்தார். அஃது 'இசுடாபைலொகோசி' என்ற நோய் நுண்ணுயிரிகளை விட்டு மற்ற பல வகையான நோய் நுண்ணுயிரிகளைக் கரைத்தது. ஒரு பங்கு பூஞ்சணச்சாற்றுடன் 500 பங்கு நீரைச் சேர்த்துப் பயன்படுத்திப் பார்த்தார். அப்பொழுதும் அது நோய் நுண்ணுயிரிகளைக் கரைத்தது.

இதன் பிறகு எல்லாப் பூஞ்சணங்களும் இவ்வகைச்சாற்றை உண்டுபண்ணுகின்றனவா? என்று அறிய முயற்சிகள் செய்யப்பட்டன. எட்டுவகையான 'பெனிசீலியம்' பூஞ்சணங்களை ஆராய்ந்து பார்த்ததில் ஒரே ஒருவகைதான் நோய் நுண்ணுயிரிகளைக் கொல்லும் ஆற்றல் படைத்திருந்தது. அது முதலில் தற்செயலாகக் கிடைத்த பூஞ்சணம்தான் என்பதைப் பிளமிங் அறிந்தார். பிறகு இச்சாற்றை மாந்தர்களுக்குச் செலுத்தினல் பயன் உண்டாகுமா? அல்லது கெடுதல் ஏற்படுமா? என்பதை அறிய முனைந்தார். மாந்தனின் குருதியில் சிறிது சாற்றைச் சேர்த்து நுண்பெருக்காடியின் மூலம் கூர்ந்து கவனித்தார். ஆனல் குருதியிலுள்ள வெள்ளணுக்கள் சாற்றல் தாக்கப்படவில்லை, இது பிளமிங்கை ஊக்கப்படுத்தியது. உடனே அவர் விலங்குகளின் மீது சாற்றைச் செலுத்தி அறியலானர்.

ஆராய்ச்சி சாலையிலுள்ள எலி, முயல் ஆகியவற்றின் உடலில் நோய் நுண்ணுயிரிகளைச் செலுத்தினர். பிறகு அவற்றின் உடலில் மேற்கண்டுபிடித்த பூஞ்சணச்சாற்றைச் செலுத்தினர். மீண்டும் வெற்றி கிட்டியது. அவற்றிற்கு நோய் ஒன்றும் வரவில்லை. அது மட்டுமில்லாது நோய் நுண்ணுயிரிகள் யாவும் பூஞ்சணச் சாற்றால் கொல்லப்பட்டன.

இறுதியாகச் செய்ய வேண்டிய சோதனை யாராவது ஒரு மாந்தனின் உடலில் அதைச் செலுத்திப் பார்ப்பதுதான். இதுவும் எளிதில் முடிந்தது. பிளமிங்கின் உதவியாளரான இசுடுவர்டு கிரடாக் (Stuart craddock) என்பவர் ஒரு தொற்று நோயால் தொல்லைப்பட்டு வந்தார். அவர் பிளமிங்கின் ஆய்வுக்குத்தன்னை உட்படுத்திக் கொள்ள இசைந்தார். அவரின் உடலில் நோய்ப்பட்ட இடத்திலிருந்து சிறிது சீழை எடுத்து அதிலுள்ள நோய் நுண்ணுயிரிகளை அளவிட்டுப் பார்த்தார். அதில் 100 'இசுடாப்பு நுண்ணுயிரிக் குழுக்களும் இன்னும் சில நோய் உயிரிகளும்' (Germs) இருந்தன. பிறகு புண்ணை நீர்த்த பூஞ்சணச்சாற்றால் கழுவினர். மூன்று மணிகளுக்குப்பிறகு பார்த்ததில் ஒரு 'இசுடாப்பு' நோய் நுண்ணுயிரிக்குழுவும் மிகச் சில நோய் உயிரிகளும் இருந்தன, கிரடாக் இச்சாற்றால் தாக்கப்படவில்லை. இப் பூஞ்சணச் சாற்றிற்குப் 'பூஞ்சணியம்' (பெனிசிலின்) (Penicillin) என்று பெயரிட்டார்.

இதன் பிறகு மிகவும் தூய்மையான பூஞ்சணியத்தைச் செய்ய ஆராய்ச்சியாளர்கள் பெரிதும் முயற்சிகள் செய்து வந்தனர். 1938-இல் ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இரண்டு ஆராய்ச்சியாளர்கள் எரால்டு புளோரி (Harold Florey) ஏனெசுடு செயின் (Ernst Chain) என்பவர்கள் பிளமிங்கின் ஆராய்ச்சிகளைப் பற்றி அறிந்து மிகவும் தூய்மையான பூஞ்சணியத்தைக் கண்டுபிடிக்க முனைந்தனர். வெற்றியும் கண்டனர். இவர்கள் செய்த பூஞ்சணியம் பிளமிங் செய்த பூஞ்சணியத்தைவிட ஓர் இலக்கம் மடங்கு விரைவாக வேலைசெய்தது. (தொடரும்)

உறுப்பினர்களுக்கு......

முகவரி மாற்றம் வேண்டும் உறுப்பினர்கள் தங்கள் பழைய முகவரியையும் தெளிவாக எழுதுவதுடன் தம் உறுப்பினர் எண்களையும் தவறாமல் குறிப்பிடுதல் வேண்டும்.

இதழ் வெளியாகும் நாளுக்கு ஐந்துநாள் முன்னதாக வரும் வேண்டுகோள்கள் மட்டுமே ஏற்கப்பட்டு முகவரி மாற்றப்படும். ஏனையவை அடுத்த திங்களில்தான் மாற்றப்படும். —அமைச்சர்.

தொடர்-க.

தொல்காப்பியத்தில் வழக்கு.

10-2: நச்சினர்க்கினியர் மரபியலில் கூறப்படும் மரபின் வழக்கையும், பாயிர வழக்கையும் கொண்டு கூட்டி முடிச்சுப் போட்டார். இடைச் சொல்லைக்கூட மாற்றிப் பொருள் செய்யக் கூடியவர் அவர். என்றாலும் வழக்கும் மரபும்-ஒன்று என்ற மருட்சியையும் அவர் உரை தரக்கூடும். ஆனல் அத்தகு மருட்சி தவறானது.

வழக்கும் மரபும் ஒரு பொருள் கருதியன அல்ல; குறுகிப வேறு பாடு உடையன.

வழக்கின் மரபியலின் நேர்ந்து வழுவாது;
இழுக்கி வடவெழுத்தை; இன்பம் வழுக்காது;
முன்னையோர் பாட்டில் பயின்ற மொழியன்றே
சொன்ன உறுப்பின் துணிபு[1]-

வழக்கு வேறு, மரபு வேறு என்பது மேற்கண்ட வெண்பாப் பட்டியலால் துணியப்படும். ஆதலின் வழக்கு என்ற பாயிரச் சொல்லுக்கு மரபியலில் கூறப்பட்ட (நூல்) வழக்கைப் பிணைப்பது பொருத்தமன்று என்பது புலனாகும்.

11-i: தொல்காப்பியர் அங்காடியில் வணிகர் பேசிய வாணிக வழக்கு மொழியையும் (Business Language) ஆழ்ந்து நோக்கி இலக்கணஞ் செய்துள்ளார். இது குமுகாயத்தில் எல்லாத் தரத்தாரின் மொழியையும் கவனித்தே நூல் செய்துள்ளார் என்பதை மேலும் வலியுறுத்துஞ் சான்றாக அமைகிறது.

'எப்பொருளா யினும் அல்லது இல்லெனின்
அப் பொருளல்லாப் பிறிது பொருள் கூறல்'—[2]
அப் பொருள் கூறின் கூடிக் கூறல்'—[3]

இவ்விரண்டு நூற்பாக்களுக்கும் ஆறுரையாசிரியர்களும் ஒத்த பொருளையே காணுகின்றனர். ஒரு வணிகரிடம் போய்

---

1. வெண்பாப் பாட்டியல்: பொதுப்படலம்-5
2, 3. தொல், சொல், 35, 36.

பயறு உளவோ' எனக்கேட்க அவன் பயறுஇல்லை என்பதைக் கூருது 'உளுந்து அல்லது இல்லை' எனப் பதிலிறுப்பானும்.

'கொல்லவன் பட்டுளவோ' என்று துணிக்கடை வணிகனைக் கேட்டல் அவன் 'கோசிகன் அல்லது இல்லை' [1] எனப் பதிலிறுப்பானும். கூலவாணிகர் மொழியையும், கூறை (துணி) வாணிகர் மொழியையும் கண்டு அன்றே இலக்கணஞ் செய்த தொல் காப்பியர் திறத்தை நாம் வியக்கிறோம்.

12-1. தொல்காப்பியத்திற்கு விளக்கம் கூறப் புகுந்தாற் போன்று சிறந்த நூலாசிரியரான பவணந்தி வழக்கு இன்னது, செய்யுள் இன்னது என விளக்கம் தருகிறார்.

இலக்கணமுடையது இலக்கணப் போலி
மரூஉ என்றாகும் மூவகை இயல்பும்
இடக்கர் அடக்கல் மங்கலம் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோ டாகும் வழக்கியல்-[2]

என வழக்கு என்பதை வகைப்படுத்தி இலக்கணம் கூறிவிட்டு அதன் தொடர்ச்சியாகச் செய்யுள் என்பதற்கும் இலக்கணம் வகுக்கின்றார். [3]

தகுதி வழக்கு என்பதற்கு விளக்கம் கூறவந்த பழைய உரையாசிரியர் ஒருவர், "உயர்ந்தோரும் இழிந்தோரும் இவ்வாறு கொண்டு மொழிவது தக்கதென்று கொண்டு வழங்குதலின் தகுதி வழக்கென்றாயின [4] –எனக் குறிக்கிறார். இந்த உரைக் குறிப்பும் மொழி இலக்கணம் செய்வோர் பார்வையில் உயர்தோரை அன்றி இழிந்தோரும் கருதிக் கொள்ளப்பட்டனர் என்ற கருத்தை அரண் செய்கிறது.

13-1: 'வழக்கு என்பது சாதாரண வேடர் மாழியையும் பொற் கொல்லர் மொழியையும், யானைப்பாகர் மொழியையும், வண்ணக்கர் மொழியையும் உட்படுத்திச் செல்லுகிறது' என்பது இளம் பூரணர் உரையானும்[5] பெயர் தெரியாப்பழைய உரையானும் [6]. குட்டித் தொல் காப்பியமான இலக்கண விளக்கத்தானும் [7] நன்னூலானும் உறுதியா கிறது.

---

1. சொல்லதிகார உரைக்கோவை. தெய்வச்சிலையர். உரை.பக்-166
2. நன்னூல்–267
3. நன்னூல்-268: பல்வகைத்தாதுவின் உயிர்க்குடல் போல் பல
   சொல்லாற் பொருட்கிட னாக உணர்வினின்
   வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்.
4. வை. மு. ச. நன்னூல். காண்டிகைக் கீழ்க்குறிப்பு பக்-168
5. தொல் சொல்-17 இளம் பூ
6. சொல். உரைக்கோவை பக்-98
7. இலக்கண விளக்கம்-168

தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை இலவே—[1]

என்ற தொல்காப்பிய நூற்பா உரையில்

"குழுவின் வந்த குறிநிலை வழக்கு; பொற்கொல்லர் பொன்னைப் பறி என்றும், வண்ணக்கர் காணத்தை நீலம் என்றும் வரும்"-என்பர் இளம்பூரணர். சோற்றைச் சொன்றி எனும் இழிசினர் வழக்கையும் காட்டுவர் பழைய உரையாசிரியர். இலக்கண விளக்கத்தாரும் நன்னூலார் கூறுவதைப் பிறழாது தானெடுத்து மொழிவர். நன்னூல் உரையாளரான சங்கர நமச்சிவாயர் 'யானைப்பாகர் ஆடையைக் காரை என்றும் வேடர் கள்ளைச் சொல் விளம்பி என்றும வழங்கும் இத் தொடக்கத்தன குழூஉக்குறி' என்று குறிப்பர்.

13-2: நன்னூலார் வழக்கைப் பகுத்த முறை.



நச்சினார்க்கினியர் பகுத்துக் கொண்ட முறை



நச்சினார்க்கினியர், சேனாவரையர், சிவஞானமுனிவர் ஆகியோர் இழிந்தோர் வழக்கைத் தொல்காப்பியர் பேசவில்லை என்று கருதினர். இளம்பூரணர், பழைய உரைகாரர் அவர் பேசினார் எனக் கருதினர். நன்னூலார் இலக்கண விளக்க முடையாரும் இக்கருத்துடையவரே. இரண்டாம் கருத்தே மிகப்பொருத்தமுடையது என்பது மேலே காட்டப் பட்டது. ஆக வழக்கு என்ற சொல் சான்றோர் வழக்கைமட்டும் உட் படுத்தி நிற்கவில்லை. அது பொது மக்களின் பேச்சு வழக்கையும் உட் படுத்தி நிற்கிறது என்பது தோற்றமாகிறது.

1. தொல். 17

14-1: மொழி என்பது இலக்கியத்துள் உள்ளது மட்டுமன்று மக்களாற் பேசப்படுவதும் மொழிதான். ஆராயப்போனுல் இலக்கிய மொழியைக் காட்டிலும் பேச்சு மொழியே தொன்மையானது. அன்றியும் இலக்கிய மொழிக்கு அடிப்படையானதுங்கூட. அதனுற்ருன் மொழியியல் அறிஞர்கள் இலக்கிய மொழியைக் காட்டிலும் பேச்சு மொழிக்கு முதன்மை தருகிருர்கள். 'பேசப்படுவதும் கேட்கப்படுவதுமே உண்மையான மொழி; ஆயினும் எழுதப்படுவதும் அடுத்த நிலையில் வைத்துக் கருதப்படும் மொழியாகும்' என்பர் [1]

குழந்தையின் இயல்பினை ஆராயும் ஒருவன அக்குழந்தையைப் பெற்ற தாயையும் ஆராய்வது இயல்பு. பெற்றோரின் எச்சந்தானே குழந்தை. அதுபோன்றே இலக்கியம் வழக்குமொழி பெற்றெடுத்த குழந்தை. குழந்தைக்கு அடிப்படையே தாய்தானே! அதனுற்ருன் மொழியியல் அறிஞன் மொழியின் இரு நிலைகளையும் ஆராய்கிருன்; வழக்கு மொழிக்கு முதன்மையும் கொடுக்கிருன்.

"The linguist distinguishes between language and writing where as the layman tends to Confuse the two. The layman's terms "Spoken Language" and written language are merely two different manifestations of some thing fundamentally the same. Often enough the layman things that writing is some how more basic than speech. Almost the reverse is true [2] என்று மொழிநூல் அறிஞர் ஆக்கெட் (Hockett) கூறுவது இவண் கருதற்குரியது.

எழுத்து மொழியும் அதன்பின் வந்த இலக்கிய மொழியும் பிற்காலக் கண்டுபிடிப்புகளாகும். இன்றுங்கூட எழுத்து வடிவம் பெருமல் பேச்சு வடிவிலேயே வாழ்கின்ற மொழிகள் பல உள்ளன. இது நமக்கு எதனை உணர்த்துகிறது? பேச்சு மொழியின் முதன்மையையும் இன்றியமையாமையையும் உணர்த்துகிறது. இந்த அடிப்படை உண்மையை அடிப்படையாகக் கொண்டு தமிழ்மொழிக் கிலக்கணம் செய்தவர் தொல்காப்பியர் என்பதை உணர்த்தவே, பாயிரம்,

(1) மொழிவரலாறு. பர் மு. வ. பக்-7
(2) A Course in modern Linguistics P, 4.

'வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்

எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி' என இவ்வாறு முறைபட அமைத்துச் செல்கிறது. செய்யுளைவிட வழக்கின் முதன்மையையும் இன்றியமையாமையையும உணர்த்தவும், செய்யுள், வழக்கைப் பின் பற்றி வருவதே என்பதை அறிவுறுத்தவும், செய்யுள் என்பதை முன் வையாது வழக்கு என்பதை முன் வைத்துப் பேசியுள்ளார். அன்றியும் தொல்காப்பிய 1610 நூற்பாக்களுள் 487 நூற்பாக்களே 30.5% விழுக்காடே செய்யுள் பற்றி விதந்தோதப்பட்டிருக்க 69.5% (1123) விழுக்காடு நூற்பாக்கள் வழக்கிற்கும், செய்யுளுக்கும் பொதுவாக ஓதப்பட்டமையும் ஆழ்ந்து நோக்கத்தக்கது.

சிறந்த மொழியியல் அறிஞரான தொல்காப்பியர் இருபதாம் நூற்றுண்டில் கூறப்படும் மொழியியல் உண்மைகளைப் பலநூறு ஆண்டு கட்கு முன்பே கண்டு சொல்லிருக்கிருர் என்பது நம்மைப் பெருமைபட வைக்கிறது. ஆனுல் அதே நேரத்தில் தன்னை அறிமுகம் செய்து கொள்ளத் தெரியாத தமிழ்க் குலத்தில் தொல்காப்பியன் பிறந்தானே என நினைக்கும் போது நம்மை வருந்த வைக்கிறது. இத்துணைச்செய்தி கள் கூறும் தொல்காப்பியர் ஒரு மேனுட்டானுகவோ, வடமொழி வாணனுகவோ பிறந்திருந்தால் அவன் எத்தகு புகழ்க்குவட்டின் உச்சி யில் உயர்த்திப்பட்டிருப்பான் என்பதை நினைக்கும் போது நம்மை நாண வைக்கிறது.

15-1. வடவேங்கடந் தென்குமரி

... ... நாடி

என்ற பாயிரத் தொடரின் பொருள்: வடக்கின்கண் வேங்கடமும் தெற்கண் குமரியும் எல்லையாக உடைய அவ்விடமாகிய தமிழ்மொழி யைக்கூறும் நல்ல உலகத்தின்கண் இருதிறத்தாரும் பேசும் பேச்சு மொழியினையும் (Colloquial language) இலக்கிய மொழியையும் (Literary Language) அவர் தம் வாழ்க்கை நடப்புகளையும் (Family life) ஆராய்ந்து அவற்றைப் பெரும் அடிப்படையாகக் கொண்டு எழுத்திலக்கணத்தையும், சொல்லிலக்கணத்தையும், பொருளிலக் கணத்தையும் விரும்பி (வகுத்தளித்தனன்) என்பதாம். உலகத்து என் பது ஏழாம் வேற்றுமையாகவும், இருமுதல் என்பது பண்புத்தொகை யாகவும் ஆய்-இருமுதல் என்பது வினைத்தொகையாகவும் கொள்ளப் பட்டன. பொருளிலக்கணமும் செய்தானுகலின் வாழ்க்கை நடப்பு களையும் ஆராய்ந்தான் என்று கூறப்பட்டது.

இதுவரை—, வழக்கு என்பது பலபொருள் ஒரு சொல் என்பதும், அது முகமன் வழக்கு, அளவை வழக்கு, இழிசினர் வழக்கு, இயல்பு வழக்கு, தகுதி வழக்கு, வழக்குரைமுறை எனப் பலவாறாகப் பேசப்படுகின்றது என்பதுவும், தொல்காப்பியப்பாயிரம் இன்றியமையாதது என்பதுவும், வழக்கு, செய்யுள் என்ற இரு சொற்களுக்கு உரையாசிரியர்கள் உரை பொருந்துமா என்பதுவும், செய்யுள் வழக்கு என்பது இலக்கிய மொழியைக் குறித்தது என்பதுவும், வழக்கு என்ற சொல் சான்றோர் வழக்கை மட்டிலும் குறிக்கவில்லை என்பதுவும், அவ்வாறு கொள்ளின் சான்றோர் காமவயத்தர் எனப் பிறழ பொருள் கொள்ள ஏதுவாகும் என்பதும், மிகைபடக் கூறல் என்ற குற்றத்திற்குப் பனம்பாரனார் உள்ளாவார் என்பதுவும், சான்றோர் என்பது அந்தணர் என்பது கருத்தாயின், தொல்காப்பியர் ஒரு குலத்துக்கோர் இலக்கணம் செய்தார் என்ற மயக்குப் பொருள்பட்டு விடும் என்பதுவும். வழக்கு என்பது உயர்ந்தார் இழிந்தார் உள்ளிட்ட மக்களின் பேச்சுமொழி என்பதுவும், அதுவே, இலக்கண விளக்கமுடையார், பவணந்தியார், பழைய உரைகாரர் கருத்து என்பதும், தொல்காப்பியர் கூலவணிகர் மொழியையும், கூறைவணிகர் மொழியையும், சேரிமொழியையும் கண்டு ஆராய்ந்தனர் என்பதுவும், செய்யுளினும் வழக்கிற்கே முதன்மை கொடுத்தார் என்பது 'செய்யுளும் வழக்கும்' என ஓதாது 'வழக்கும் செய்யுளும்' என ஓதியமையால் பெறப்படும் என்பதுவும், இற்றைய மொழிநூல் உண்மைகள் தொல்காப்பியத்துள்ளும் நின்றிலங்குகின்றன என்பதுவும், கூறப்பட்டன. (முற்றும்)

இம்மாதம்

பாரதிதாசன் குயில்

படித்தீர்களா?

- சிறப்பான அறிவியல், இலக்கியக் கட்டுரைகள்
- நலிவுற்ற உடலில் வலிவுற்ற மனம்
- மாரிக்கால உறக்கம்
- பறவை ஒழுகலாறு
- பாவேந்தர் வாழ்வில் நடந்த சுவையான நிகழ்ச்சிகள்

பிற சிறந்த பகுதிகள்.

தனி இதழ் 0-75. ஆண்டுக் கட்டணம் 10 உருபா.

பாரதிதாசன் குயில்

புதுவை-1.

திரைப்படம் ஒழியவேண்டும்!

(மு. மகிழரசன்)

அடம்பிடித்த பணவேட்டை யாளர், நெஞ்சம்
அங்காந்த படிஅலைந்து கொழுத்து வெற்றே
மடம்பிடித்த கதைகளையே மடக்கிப் போட்டு
மானத்தை விற்றேகீழ்க் கலைஅ ரங்கில்
இடம்பிடித்த நாய்களைப்போய் வேட்டை யாடி
இழுத்துவந்து நிறுத்திஉடல் உருவைத் தூக்கிப்
படம்பிடித்துக் காட்டிடுதல் பண்போ? நாட்டைப்
பாழடிக்கும் திரைப்படம்முன் ஒழிய வேண்டும்.

கலைப்பேரைப் பெரிதாகச் சொல்லிச் சொல்லிக்
கட்டவிழ்த்து விடப்பட்ட கழுதை கட்கு
மலைபோல மார்பகத்தைக் குவித்துக் கட்டி
மல்லாந்து எடுப்பாகப் படுக்க வைத்து
விலைபோகத் தெற்றென்று படம் பிடித்து
விளம்பரமாய்த் திரையிடுவார்; இனைய காட்சி
தொலைந்தேபோய் விடவேண்டும் இன்றேல் இந்தத்
தொழுநோயாம் திரைப்படமே ஒழிய வேண்டும்.

நாணத்தை அறியாத நடிகையைப் போய்
நாகரிக நங்கைஎன்றே அவளுக் கூட்டும்
காணிக்கைக் கூலியைக்கீழ் நீட்டி விட்டுக்
காட்டென்றே உறுப்புறுப்பாய்த் திரும்பி எண்ணில்
கோணத்தில் படம்பிடிப்பார்; இழிவு சான்ற
கோலத்தைத் திரையிடுவார்! இனைய வெல்லாம்
மாணுதே கெடவேண்டும் இன்றேல் மக்கள்
மனம் கெடுக்கும் திரைப்படமே ஒழிய வேண்டும்.

திரைப்படத்துக் கூத்திக்குப் போட்டுக் காட்டும்
தினைத்தாளின் ஆடைகளை என்ன சொல்வோம்!
வரையஃறுத்துக் கொண்டதுபோல் தோள்வ ரைக்கும்
வழவழப்பாய்த் தெரியக்கை யில்லாச் சட்டை!
விரைந்துள்ளே தெரியும்மார்க் கச்சு! முட்டிக்
கால்வரைக்கும் ஏறிவிட்ட 'சட்டை' பின்னுல்
தெரிகின்ற முதுகுக்குக் கதவு! பொத்தான்!
தினவூட்டும் திரைப்படம்முன் ஒழிய வேண்டும்.

உடுத்திருக்கும் இழைச்சேலை ஊடே ஊடே
உள்ளிருக்கும் உடைதெரியும்; அதற்குள்ளேயும்
புடைத்திருக்கும் சதைப்பிண்டம் தெரியும் வண்ணம்
புவியோர்தம் உளம்கெடுக்கும் புரைசோ காட்சி
படம்பிடித்துப் பருவத்து மயங்கு வோரைப்
பாழடிக்கத் திரையிட்டுக் கவர்ந்திழுப்பார்
கெடல்வேண்டும் இவையெல்லாம்! இன்றேல் இன்ன
கெடுமதிசெய் திரைப்படமே ஒழியவேண்டும்.

சேற்றுக்குள் இறங்கிவிட்ட எருமை மாடு
சொரணைகெட்டுக் கிடப்பதுபோல் நீச்சல் ஆடை
மாற்றுக்குள் புகுந்துகொண்டு மானம் கெட்ட
மார்பகத்தை மேல்கீழாய் இறக்கி ஏற்றி
ஆற்றுக்குள் நீந்துகின்ற அழகி போல
அரைமட்டக் குட்டையிலே இயற்கை மேனித்
தோற்றத்தைப் படம்பிடிப்பார்; திரையிட் டார்ப்பார்
தூ! தூ! தூ! திரைப்படம்முன் ஒழியவேண்டும்.

பெண்ணென்ற நினைவற்று நாணும் அற்றுப்
பிணைத்திருக்கும் உடல்வீக்க எடுப்பை நன்றாய்ப்
புண்ணென்று மறைக்காத புடவை காற்றில்
படபடத்துப் பறக்கப்பொத் தென்று வீழ்ந்தே
என்னென்போம்! நாய்போலப் புரளும் அந்த
இழிந்தவள்மேல் வந்தொருவன் சாய்ந்து வீழ்ந்தே
அன்பே! என் றணைக்கின்ற காட்சி காட்டி
அறிவழிப்பார்! திரைப்படம்முன் ஒழியவேண்டும்.

கண்டதுமே விலைபேசும் கத்த ரிக்காய்
கருவாடு போலத்தான் காதல் இங்கே!
கொண்டாட்டம்! கும்மாளம்! வெட்கம் கெட்ட
கூத்தாட்டம் என்றெல்லாம் படம்பி டிப்பார்
கண்டார்தம் உள்ளழிந்து மேன்மை வாழ்வின்
கருத்தின்றிப் போய்க்காதல் அளறு மூழ்கித்
திண்டாட்டம் கொள்ளத்தான் திசைதி ருப்பித்
தீங்கிழைக்கும் திரைப்படம்முன் ஒழிய வேண்டும்.

ஆணென்றும் பெண்ணென்றும் கவலை யின்றி
அவள்மேலே அவன்புரள்வான் அவன் மேல் அந்த
நாணென்றே காணாத நடிகை வீழ்ந்து
நாய்வால்போல் சாய்ந்தசைவாள்! சேலை பற்றித்

தூணென்று நின்றிருக்கும் தடியன் மெள்ளத்
துகிலுரிப்பான்! அவள்முழுதும் விட்டி ழுப்பாள்!
காணென்று படம்பிடித்துக் காட்டி நல்ல
கருத்தழிப்பார்! திரைப்படம்முன் ஒழிய வேண்டும்.

மறைவில்லை! கலைவாழ்வில் மானம் இல்லை.
மற்றவரின் நினைவில்லை மனமும் இல்லை
நெறியில்லை; ஒழுக்கத்தின் நிழலும் இல்லை
நேரெதிர் ஆண் பெண்ணென்ற வேறு பாட்டின்
அறிவில்லை; அச்சமில்லை; வெட்க மில்லை!
அருந்தமிழப் பண்பாடு பண்பு மானம்
அறிகொல்லும் வெறிச்செயலே இன்று நாட்டை
ஆள்வதெனில் திரைப்படம்முன் ஒழியவேண்டும்.

(வேறு)

எங்கணும் பகட்டு; பொய்மை; எங்கணும் மினுக்கு, நொய்மை;
எங்கணும் நடிப்பாம் ஏமாற்று; எங்கணும் மடமை; வன்மை;
எங்கணும் இற்றை நாளில் போலிமை வாழ்க்கை! சீ! சீ!-ஒன்றால்
இங்கிவை ஒழியவேண்டும் அன்றால்-திரைப்படம் ஒழியவேண்டும்.

ஆடவர் நேர்மை இல்லை;
ஆண்மையிற் செறிவும் இல்லை
பேடவர் மென்மை இல்லை;
பெண்மையிற் றன்மை இல்லை
நாடுவ வெலாம்பு றஞ்சேர்
நாகரி கம்மே என்றால்—ஒன்றால்
கேடிவை ஒழிய வேண்டும்—அன்றால்
திரைப்படம் ஒழிய வேண்டும்.

நினைவினில் செம்மை இல்லை
நெஞ்சினில் உணர்வும் இல்லை
வினையினில் உறுதி இல்லை
வழிமிசை விழிகள் இல்லை
தினையளவூக்கம் இல்லை
திருத்தம்சேர் நோக்கம் இல்லை—ஒன்றால்
இனையவை ஒழிய வேண்டும்—அன்றால்
திரைப்படம் ஒழிய வேண்டும்.

அறிவினில் நாட்டம் இல்லை;
அன்பினில் ஊட்டம் இல்லை;
நெறியினில் கொள்கை இல்லை;
நேர்மையில் நடத்தை இல்லை;
துறைதொறும் மெய்ம்மை இல்லை;
துணிவினில் தெளிவும் இல்லை;—ஒன்றால்
தெறுமிவை ஒழிய வேண்டும்—அன்றால்
திரைப்படம் ஒழிய வேண்டும்!

பழியெனும் அச்சம் இல்லை;
பண்பெனும் கவலை இல்லை;
இழிவெனும் எண்ணம் இல்லை;
இளமையில் தூய்மை இல்லை;
பழக்கத்தில் ஒழுக்கம் இல்லை;
ஒழுக்கத்தில் உள்ளம் இல்லை—ஒன்றால்
இழுக்கியவை ஒழிய வேண்டும்—அன்றால்
திரைப்படம் ஒழிய வேண்டும்.

அடக்கமும் இல்லை; தீமைக்(கு)
அஞ்சுதல் இல்லை; மெய்யின்
ஒழுக்கமும் பணிவும் இல்லை;
உயிரின்சொல் இல்லை; கல்வி
மிடுக்கொடு மாண்பும் இல்லை
மனமுகத் தொளியும் இல்லை-ஒன்றால்
தொடுத்திவை ஒழிய வேண்டும்—அன்றால்
திரைப்படம் ஒழிய வேண்டும்

அரைகுறை ஆடை; மேனி அகப்புறம் அடிமேல் எல்லாம்
தெரிவுறும் ஆடை; காண்போம் தினவுறும் வாடை; நாற்றம்
நுரையிடும் ஓடை! நல்ல நெறிகெடும் பீழை! சீ! சீ!-ஒன்றால்
திரண்டிவை ஒழிய வேண்டும்-அன்றால்
திரைப்படம் ஒழிய வேண்டும்

பொன்னினில் ஒளிர்தல்; போலிப் பொலிவினில் மிளிர்தல்; புற்
[கென்
அன்பினில் குளிர்தல்; வெற்றே ஆணவம் அளைதல்; கொன்னே
இன்களவுயர்தல்; தீய இழிந்திழிந் தயர்தல் என்னே!-ஒன்றால்
முன்னிவை ஒழிய வேண்டும்-அன்றால்
திரைப்படம் ஒழிய வேண்டும்

கற்பில்லை; மெய்மைக் காதல் கவினில்லை; கருத்தில் மாண்ட
பொற்பில்லை; நம்பத் தக்கப் போக்கில்லை: குறிக்கோள் என்ற
வெற்பில்லை; மேன்மை சான்ற விருப்பில்லை; விளக்கம் இல்லை-
செற்றிவை ஒழிய வேண்டும்-அன்றால் [ஒன்றால்
திரைப்படம் ஒழிய வேண்டும்

திரைப்படக் கூத்து; பண்பு திரித்திடும் கூத்து; பொய்மை
திரையிடும் கூத்து; கீழ்மை திணித்திடும் கூத்து; தூய்மை
புரைசெயும் கூத்து; நாட்டைப் பொசுக்கிடும் கூத்து; சீ!சீ!
திரண்டிவை ஒழிய வேண்டும்-அன்றால் [ஒன்றால்
திரைப்படம் ஒழிய வேண்டும்

தமிழக அரசே!

தமிழக அரசே; தமிழக அரசே!
கமழ்மலர்க் கன்னித் தமிழக அரசே!
ஆட்கொளப் புகுந்த ஆரிய மொழியை-
நாட்படச் சீழ்த்த நச்சு மரபை
அடிவேர் கல்லி அந்தமிழ்த் தூய்மை
நெடுநாட் பொலிய நெஞ்சுரஞ் சான்று
சொல்வேர் ஆய்ந்து சூழ்மர போர்ந்து
பல்கால் முதிர்ந்த பன்மொழி தேர்ந்து
உயிர்மைத் தமிழ்வளம் உலகரங் குணர்த்தி
அயிர்வுடை உளத்தை அறைகுறைப் பற்றைத்
தன்பால் ஈர்த்துத் தனித்தமிழ்ப் பாலை
இன்பா லமிழ்தாய் இசைபட வூட்டும்
மூவாத் தமிழின் மூலப் பெருங்கடல்
பாவா ணர்வழிப் பைந்தமிழ் நாட்டுக்
கான்முளை வளர்வைக் கருத்திற் கொண்டே
ஆன்முலைப் பாற்புகு அயனீர் நீங்கச்
சுண்டக் காய்ச்சிச் சுவையுற அருந்தும்
தொண்டுளத் தாய்போல் தூய்தமிழ் உயிர்க்கும்
"தென்மொழி" தன்னைத் தேடிச் சென்று
முன்னின் றேத்தி முறைபடக் காவா
தொழியினும் பிழையிலை; ஒல்காத் தமிழே
அழியினுங் கவலுறு அற்றைக் கொடுநெறி
பேரா யத்தார் பேருக் கேனும்
பாராட் டுக்காம் பணிபோற் பொய்த்து
நூலகந் தன்னில் நுழைய விட்டார்;
காதலர் வழியொரு கடுகுப் புகைபுக
முற்படு மாயினும் மூண்டெழுந் தார்த்துக்
கற்படு ஆடிபோற் கடுகிச் சிதற்றிடும்
இற்றைக் கழக இன்றமி ழரசே!
ஒற்றைச் சிறுபுணை; ஒண்மைத் தமிழ்த்துணை
பொற்புறு யாறு போமுன் கடலுள்
வெற்பெனத் தடுக்கும் வியன்கழி பேரணை
"தென்மொழி" மீட்டுந் தீந்தமி ழகத்தில்
தென்படும் நூன்மனை தோறும் மிளிர்ந்திட
விண்டிடு கட்டளை விரைந்தே
தண்டமிழ்ப் புரக்குந் தமிழக அரசே!

குறிப்பு:- இதன் படியொன்று தமிழக அரசினர்க்கு விடுக்கப்பட்டது

-பன்னீர்ச்செல்வன்-

உளவியல் அறிஞர் தொல்காப்பியர்.

இ. மறைமலை (மு. க.)

ஒல்காப்பெரும் புகழ்த் தொல்காப்பியத்தைப்போன்று ஓர் இலக்கிய இலக்கணம் (Science of literature) இதுகாறும் உலகின் எம் மொழியிலும் செம்மைப்படச் செய்யப்பட்டிலது. இது தமிழின் சிறப்பையும், வளத்தையும், ஏற்றத்தையும் என்றென்றும் புலப்படுத்தி நிற்கும், தமிழரின் உயரிய கருவூலமாகும். எழுத்தையும் சொல்லையும் இனிதின் விளக்கி, அகப்பொருளையும் புறப்பொருளையும் அழகுபட வகுத்துக்காட்டி, செய்யுளியலைச் செம்மையாய் வரைந்து, மெய்ப்பாட்டியலை மெய்ப்பட வுரைத்து, மரபியலை மாண்பொடு நல்கிய தொல்காப்பியத்துக்கு இணை வேறு எம்மொழியிலும் இல்லை.

கிரேக்கப் பேரறிஞர்களில் அரித்தாட்டிலைப் பல்கலைத் தந்தை எனப் புகழ்வர். அவர் அளவை இயலுக்குத் (Logic) தந்தையாய் இருப்பினும் அவர் நூல்களில் உயிரியல் (Biology), கலவை இயல் (Chemistry), இயல்பியல் (Physics) முதலிய அறிவியல் துறைகளின் கருத்துகளையும் காணலாம். இவை அறிவியல் வரலாற்றுக்குப் (History of Science) பெரிதும் உதவுவன.

தமிழில் அவ்வாறு தொல்காப்பியரைக் குறிப்பிடலாம். அரித்தாட்டிலின் கருத்துகள்கூட அவரது கால எண்ணப் போக்கை அறிவிக்கும் வகையில் கற்கப்படுகின்றனவே தவிர அவற்றில் உண்மையைக் காண்பது அரிது. ஆனால் தொல்காப்பியரின் கூற்றுகள் மூவாயிரம் ஆண்டுகள் முற்பட்டவையாய் இருப்பினும் இன்றைய அறிவியல் உண்மைகளையே ஒத்துளது.

பொருள் என்னும் பிரிவில் பொருளியலுக்கு அடுத்துக் கூறப்படும் மெய்ப்பாட்டியலில் மெய்ப்பாடுகளின் தோற்றம், வகை, அகத்

துறைக்கும் புறத்துறைக்கும் பொதுவான மெய்ப்பாடுகள், களவிய லுக்குரிய மெய்ப்பாடுகள், கற்பியலுக்குரியன ஆகியவற்றை முறைப் படுத்திக் கூறுகிறார். இம்மெய்ப்பாட்டியலை உளவியல் அறிஞர் ஆராய்ந்தால் இருபதாம் நூற்றாண்டில் உளவியலாளரின் கண்டுபிடிப்பு கள் என்று கருதப்படும் புதிய உண்மைகளைத் தொல்காப்பியத்தில் காணலாம்; விரிவான ஓர் ஆய்வுக்குரிய கருத்துகள் இதில் அடங்கி யுள்ளன; சிலவற்றை மட்டும் இங்குச் சுருங்கக் காண்போம்.

மெய்ப்பாட்டியலின் இறுதி நூற்பா,

"கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க்கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோளெண்ணருங் குரைத்தே"

என்பதாகும். இதன் பொருள், "கண்ணானும் செவியானும் யாப்புற அறியும் அறிவுடையார்க்கல்லது மெய்ப்பாட்டுப் பொருள் கோடல் ஆராய்தற்கு அருமையுடைத்து" எனப் பேராசிரியர் கூறுகின்றார். மெய்ப்பாடு தோன்றலால் முகம் வேறுபடுதலும், உரை வேறுபடுதலும் உடைமையால் அவற்றைக் கண்ணாலுஞ் செவியாலும் உணரலாம் என்பது மேலோட்டமான பொருள். நுணுகிப் பார்த்தால் மெய்ப் பாட்டை அறிதற்கும், உணர்தற்கும் கண்ணும், செவியும் இன்றி யமையாதன, வெளிப்படுத்தற்கும், உரைத்தற்கும் முகமும், வாயும் வாயில்களாக உள்ளன என்பது தெளிவு. இதனையே வேறுவகையில் கூறினால் உளவியல் அறிவிற்குக் கண்ணும், செவியும் இன்றியமையா தனவாகும். மேலை நாட்டு இலக்கிய அறிஞர்களும் தமது இலக்கியங் களிலே மெய்ப்பாடுகளை எடுத்துக் காட்டியுள்ளனர். அவர்கள் "மெய்ப் பாடுகளை உணர்த்தும் வாயிலே கண்" எனப் பிறழ உரைத்தனர். இக் கூற்று தவறு எனத் தற்கால உளவியல் வல்லுநர் கூறிவிட்டனர். 1

ஆயின் தொல்காப்பியரின் கூற்று உளவியலார் ஏற்றுக்கொண்ட உண்மையேயாம். உளவியல் அறிவிற்குள் கண்ணிற்கும் செவிக்கும் தொல்காப்பியர் முதன்மை அளித்தவாறே தற்கால உளவியல் வல்லு நர்களும் முதன்மை அளித்துள்ளனர். "பிறநுண்தசைக் கட்டமைப்பு

1. The notion so dear to the pens of many poets- the eyes are the windows of the soul - seens to be more poetic than truth - PSYCHOLOGY By D. WICKENS and R. MEYER. P. 176.

களைக் காட்டிலும் கண்ணின் தசைகள் உறுதி மிக்கன ; வாழ்நாள் முழுவதும் அவை உழைத்தாலும் எவ்வகை அயர்வும் தளர்வும் கொள்வதில்லை'' என ஒல்க்மேன் (Volkmann) என்பவர் கூறுகின்றார்.

காட்சியறிவினால் (Visual perception) உற்றுணர்ந்தறிய (Tactual perception) வேண்டுவனவற்றைக்கூட அறியலாம் ; அசைவு (Motion), பரப்பு, மென்மை, திண்மை எண்ணிக்கைபோன்ற பலவற்றை அறியலாம் ; எனவே காட்சியறிவே உளவியல் கூறும் அடிப்படை அறிவு என்பர். (H. Spencer Principles of Psychology Vol. II). இதனைக் கூறுவதன் நோக்கம் என்னவெனில் காட்சியறிவே அடிப்படை அறிவு, முதன்மையான அறிவு என நிறுவப்பட்டது, அண்மையில்தான் எனத் தெரிவிப்பதேயாம். சென்ற நூற்றாண்டில் தான் இக்கருத்தைப் பெர்க்கிலி (Berkeley) என்பவர் "பெர்க்கிலியின் பார்வைக் கொள்கை" என்ற கொள்கையால் நிறுவினார்.

இதே போன்று கேள்வியறிவின் சிறப்பும் (Auditory Perception) விளக்கப்பட்டுள்ளது. இஃது இரண்டாம் இடமே பெறுகின்றதெனினும் இன்றியமையாததேயாம். "சொற்களை நிரல் பட அறிந்து அவற்றின் கால அளவை உணர வகை செய்வது செவி" என்பது பெயின் (Bain) என்பவரின் கூற்று. எனவே வெளி உருக்களை (Space forms) அறியக் கண்ணும், கால உருக்களை (Time forms) அறியச்செவியும் இன்றியமையாதன என்பது உளவியலாளர் கருத்து. அவ்வாறே தொல்காப்பியரும் கண்ணிற்கும் செவிக்கும் முதன்மையளித்தார்.

மெய்ப்பாடு தோன்றுதலையே உளவியலாளர் சென்ற நூற்றாண்டில்தான் அறிவியல் முறைப்படி ஆய்ந்து, "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என நிறுவினர். (Volkmann's Theory-Lehrbuch-der Psychologie). ஆயின் மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தொல்காப்பியர் இதனை ஆராய்ந்து, கண்டு வகைப்படுத்தியுள்ளமையை என்னென்பது? எனவே உளவியல் துறை ஆன்றோர் மெய்ப்பாட்டியலை ஆய்ந்து இதிற் காணக் கிடக்கும் உளவியல் உண்மைகளை உலகுக்கு உணர்த்துவாராயின் தமிழகம் அவர்க்கு நன்றி செலுத்தும்.

இனி மெய்ப்பாட்டியலுக்கு உரை வகுத்த பேராசிரியரும் ஓர் உளவியல் வல்லுநராகவே இருத்தல் வேண்டும். தமது காலத்திலிருந்த

உளவியல் நூற்களின் துணை கண்டு மெய்ப்பாட்டியலுக்குத் தக்க தோர் உரையைப் பேராசிரியர் எழுதியிராவிடில் இன்று தொல்காப்பி யர் கூறிய கருத்துகளை நாம் பிறழ உணர்ந்திருப்போம். இனி அவரது உரையின் சிறப்பைக் காண்போம்.

"மெய்ப்பாடு என்பது பொருட்பாடு. அஃதாவது, உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோ ராற்றான் வெளிப்படுதல்" எனப் பேராசிரியர் உரை வகுக்கின்றார்.

உள்ள நிகழ்ச்சியே இன்பம் போன்ற சுவைகள் பிறத்தலுக்குக் காரணம் என்பது இன்றைய உளவியல் வல்லுநரின் கண்டுபிடிப்பு, தூண்டல்முறையும் இதனையே (Law of Stimulation) கூறுகின்றது. சான்றாக மகிழ்ச்சியைக் கொள்வோமாயின், மகிழ்ச்சி, உள்ளத்தின் ஒரு துறையையோ, ஆற்றலையோ, திறனையோ சார்ந்தது; தொடர்பு கொண்டது என்பர்.

"புலப்படுவதோராற்றான் வெளிப்படுதல்" என்றமையால் மெய்ப் பாடு உடலின் வழியே வெளிப்படுதலைக் கூறுகின்றார். நரம்பு மையங் களைக் (Nerve centre) கிளரச் செய்யும் அனைத்து உணர்வுகளும் நரம்புக் கட்டில் (Nervous system) பரவி, சுழற்சியான விளைவுகளை (Cycle of effects) ஏற்படுத்தும். உணர்வின் வளர்ச்சியும் தொடர்ச்சி உடலில் ஏற்படும் விளைவுகளின் தொடர்ச்சியைப் பொறுத் தது என்பது உளவியலாளர் கருத்து. எனவே மெய்ப்பாட்டின் கால நீட்சியும், மாற்றமும் உள்ளக்குறிப்பை விளக்குதல் அறிவியல் அடிப் படை கொண்டதே.

இனி, "சுவை" என்பதை விளக்க வந்த பேராசிரியர் "நகையும் அச்சமும் முதலாகிய உணர்வு முற்காலத்து உலகியலான் அறிவா னொருவன் அவற்றுக்கு ஏதுவாய பொருள் பிறகண்ட வழித்தோன்றிய பொறியுணர்வுகள் சுவையாம்" என்கிறார்.

இங்கு "உலகியலான் அறிவானொருவன்" எனக் கூறியமையால் உணர்வுகளை உலகியலால் அறிந்தே பின்னர் நாம் வெளிப்படுத்துகி றோம்" எனும் உண்மை புலப்படுகிறது. இவற்றை வாங்கி அனுப் பப்பட்ட தொடர்புணர்வுகள் (Transmitted associations) என்பர். குழந்தை அழுதல், பெருமூச்சு விடுதல் போன்ற இயல்புணர்வுகளை

காமம்

புலவர். திருமேனி. நாகராசன். காரைக்கால்

முன்னுரை:- + உலகில் சிலபொருள்களைச் சுட்டிக்காட்ட இயலா. அவற்றை, வழங்குகின்ற மரபு முறையால் மனத்தின்வழி உணர்தல்வேண்டும். அவை: ஒட்பும், உருவும், வெறுப்பும், கற்பும், பொலிவும், அழகும், மென்மையும், நாணும், மடனும், நோயும், வேட்கையும், நுகர்வும் பிறவுமாம். எனவே அன்பும், அருளும், காதலும், காமும் அவற்றின் பாற்படும் என்க.

காமம் இன்னதென்பது:- காமம் என்பது ஆழமானதோர் உணர்வாம். அது தலைவன், தலைவியரிடத்து நிகழ்வது. காமம் ஒரு நோய்அன்று; துயரமும் அன்று: மக்களிடத்தே நிறைந்து நிற்கும் ஒருகுணம். அதுமிகுதலும் தணிதலும் இன்று

காமத்தின் பண்புகள்:-ஒருகால் காமம் நெருஞ்சிப் பூவினும் சிறிதே. பிறிதொருகால் அது வானினும் உயர்ந்தது; பரவையினும் பரந்ததாம். காமத்தை ஒப்பவைத்து நோக்க உயிரும் மிகச் சிறிதாகும். காமத்தில்,

o " காலையும் பகலும் கையறு மாலையும்
ஊர்துஞ் சியாமமும் விடியலு மென்றிப் "

பொழுதுகள் புலனுகா; இரவும், பகலும், இடமும், சூழலும், இவை போல்வன பிறவும் தோன்ரு- காமத்தில் தலைவனுக்குத் தலைவியும், தலைவிக்குத் தலைவனுமே தோன்றுவர்.

+ தொல்காப்பிய -பொருளதிகாரம் பொருளியல்-நூற்பா எண்: 243
H குறுந்தொகை; பாடலெண்: 136
O ,, ,, : 32

(முன்பக்கத் தொடர்ச்சி)

(Instinct) பெற்றிருப்பினும், தன் தாயின் முகத்தை நோக்கியே புன்னகை, சீற்றம் போன்ற மெய்ப்பாடுகளைக் கற்றுக்கொள்கிறது. எனவே ,'உலகியலான் அறிவா னொருவன்" எனப் பேராசிரியர் கூறியமை அவரது உளநூல் அறிவையே வெளிப்படுத்துகிறது.

எனவே தொல்காப்பியரின் உளநூற் புலமையை மெய்ப்பாட்டியலில் கண்டு களிக்கலாம்; பேராசிரியரின் திறமிகு உரையையும் உளவியலின் துணைகொண்டு உய்த்துணரலாம்.

தொல்காப்பியரின் உளநூற் கருத்துகளை உலகோர்க்கு உணர்த்தத் தக்க உளவியல் அறிஞர் முன்வரவேண்டும். தமிழக அரசும் பல்கலைக் கழகங்களும் இத்தகைய ஆய்வுப் பணிகட்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தல் வேண்டும். வாழ்க தமிழ் !

தலைவியிடம் காமம்:-காமம்இருவர்க்கும் உரித்தாயினும் தலைவியோ அதனால் கழிபெருந்துன்பம் காண்கிறாள். என்னை? பெண்ணியல் பால் என்க, + "காமம், தலைவன் என்னை அணுகியபோது வெளிப்பட்டு இன்பம் ஈந்தும், அவன் என்னைப் பிரிந்தபோது தான் விலகாதாகித் துன்பம் பயக்குமாறென்னை" யென வாடுவாள் ஒரு பொழுது. *"பிரிவினுல் ஒருவராகிய துன்பத்தினின்றும் தப்புதற்குப் பிரிதற்கு அரியதாகிய குறையாத காமத்தோடு ஒருங்கே தலைவனும் யானும் உயிர் விடுதல் நன்றென"க் கதறுவாள் பிறிதொரு பொழுது. இன்னும் ஒரு பொழுது o"காமம் பொறுக்க என்பர். தாம் காமம் அறியாரோ? அன்றி வன்மையுடையாரோ? யான் என் தலைவனைக் காணேனாயின் செறிதுயர்மிகு நெஞ்சொடு பாறையில் மோதும் சிறுநீர் நுரைபோல மெல்லமெல்ல இல்லாவேன்" என்பாள்.

தலைவனிடம் காமம்:- காமநோயுற்ற தலைவனின் நிலையும் இரங்கத்தக்கதாகும். அவன் அதனால் சால வருந்தித் தேய்வதும் உண்டு. தலைவன் காமத்தால் பாம்புக்குருளையால் அணங்குற்ற காட்டுக் களிற்றைப் போல்வானுவான். †"நெஞ்சே! பொருளில் வறிஞன் இன்பம் விரும்புமாறுபோலப் பெறற்கரிய காதலியை விரும்புகின்றனை. அவள் நல்லள் என்பதை அரிந்தாற் போலப் பெறற்கும் அரியள் என்பதையும் அறியாயோ?" எனக் கலங்குவான் முன்னம். பின்னும் அந்நோயுற்ற நெஞ்சைவிளித்து ௳நெஞ்சே! கீழ்க் கடலில் முதுமை உற்றுச்சிறகிழந்த நாரை மேற்கடல் துறை அயிரைமீனைப் பெறவிரும்பினாற்போலச் சேய்மையனும், பெற்ற கரியனுமாகிய் தலைவியைப்பெற நினைவாய். நீ நோயுடையாய்; போகூழுடையாய்" என்றழிவான்.

காமம் தோன்றுங்காலம்:- ஊழான் தலைவன் தலைவியைக் கண்டவிடத்தும், தலைவி தலைவனைக் கண்டவிடத்தும் மட்டுமே காமம்தோன்றும். என்னை? "*பாணியுமுடைத்துக் காணுநர்ப் பெறினே" என்பது சான்றோர் கூற்றாகலின். காமம் வளர்வது ஒருவரை யொருவர் கண்டவிடத்தே. அவர் கண்டிலரேல், அஃது அவரவர் உள்ளத்தே கிடந்து மெலிவுறும்.

+ குறுந்தொகை; பாடலெண்: 257 * குறுந்தொகை;பாடலெண்:136
* ,, ; ,, : 57
o ,, ; ,, : 290
† ,, ; ,, : 120
௳ ,, ; ,, : 128

காமமும் நாணும்:- நாணம் என்பது தலைவியுடன் பிறந்தது' †"நாணொ டுடன்பிறந்த நான்' என்பது மூத்தோர் முடிபாம். காமம் என்பது இடையில் வருவது. தலைவி ஊரார் பழிச்சொற்கு அஞ்சிக் காமத்தைக் கைவிட்டால் எஞ்சுவது நாண்ஒன்றே. நாண் இருந்து யாது பயன்? ஏனெனில், காமத்தைக் கையிகந்தமையால் அவளது பெண்மையும், கற்பும் அழியும் என்பது உண்மை ஆதலால். எனவே தான் தலைவி தன் கற்பழிவுக்கு அஞ்சிக் காமத்தைப் போற்றுவாளாகினாள்; அதற்கு மறுதலையான நாணத்தைத் துறக்கிறாள். என்னை?

* "அளிதோ தானே நாணே ....
....
தாங்கு மளவைத் தாங்கிக்
காமம் நெரிதரக் கைந்நில் லாதே"

இதனால் நாணத்தைக் காமம் இறுதியில் வென்றுவிடும் என்க.

முடிவுரை:- காமம் அரும்பெறல் ஆற்றல் உடையதே. அது தன்னேரில் தலைவனை ஆட்டிப் படைக்கின்றது; தலைவியின் இன்றியமையா நாணத்தையும் அழிக்கும் அடுபடையாகிறது. காமத்தைத் தமிழிலக்கியங்களில் சான்றோர் ஆங்காங்கே சுட்டிச் சென்றுள்ளனர். அவற்றை இனங்கண்டு கற்றுணர்ந்து இன்பம் துய்த்தல் தமிழர் கடனாம்.

---

† முத்தொள்ளாயிரம்; பாடலெண்: 98
* குறுந்தொகை; பாடலெண் : 149

தென்மொழி கடலூர் 1-

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு.
ஆண்டுக் கட்டணம்:	6 உருபா	7-25 உருபா	9 உருபா
தனி இதழ்:	50 காசு	60 காசு	75 காசு

அரையாண்டுக் கட்டணம் இல்லை.
ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

தக்காரின் வழிச்செல்வீர்!

"உலகன்"

காணவரும் பொருள்களிலே கண்மயங்கிக்
கருத்தழிந்து கடமை விட்டே
கோணலெனும் பாதையிலே கொள்கை யின்றிக்
குழுநாயக் கோட்பா டின்றிப்
பேணவரும் பண்பு, மொழி பெட்பார்ந்த
இனமிவற்றில் பிறழ்ந்து செல்லும்
மாணவரே! உமக்குத்தான் மனம்நொந்து
சிலசொற்கள் வரைவேன் கேளீர்; (1)

அடக்கத்தின் உறைவிடமும் ஆக்கத்தின்
நிறைவிடமும் அன்பும் பண்பும்
நடக்கப்பின் நடக்கின்ற நாகரிகத்
திருவுருவாய் - நாடும் வீடும்
படைக்கின்ற பண்பாட்டின் உறைவிடமாம்
மாணவரே! பண்பு கெட்டால்
எடுக்கின்ற தகுநிலையின் எழில்கெட்டுப்
போகும்! ஐயம் இமியும் வேண்டா! (2)

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
முன்தோன்றிக் கைவாள் கொண்டே
வெல்லுதலே தொழிலாக மறமொன்றே
எழிலாக வினைகள் ஆற்றிப்
பல்லுலகும் பின்பற்றும் பண்பு'மொழி
நாகரிகம் படைத்த ளித்த
தொல்லுலகத் தாய்மொழிநம் தாய்தமிழே!
மொழிவழியே தொடர்ந்து செல்வீர்! (3)

இக்கால மக்களினம் இன்பமெனக்
கொள்வதெல்லாம் இழிவின் வாயில்!
வக்கணையாய்ப் பேசுவதும் வரிவரியாய்
எழுதுவதும் வாய்மை யாமோ?
முக்கால மும்உரைப்பேன் முளைத்துவரும்
திரைப்படத்தால் ஒழியும் பண்பே!
தக்காரின் வழிச்செல்வீர்! தனித்தமிழின்
பண்புநலம் தழைக்கச் செய்வீர்! (4)

மொழியொன்றே விழியாக, மூச்சொன்றே
உணர்வாக முயன்று நன்றாய்
வழிவழியாய் வந்ததமிழ் வளங்காக்கப்
பணிசெய்வீர்! வாய்மை யற்ற
கழிவுகளைத் தள்ளிடுவீர்! கனிதமிழின்
சுவைமாந்திக் கடமை எண்ணம்
வழிநெஞ்சின் வழிப்பட்டு வரலாறு
பலபடைத்து வாழ்கு வீரே! (5)

விபுலாநந்தர் வரலாறு.

புலவர்: தி. நா. அறிவுஒளி

''குழல் இனிது யாழ் இனிது என்ப தம் மக்கள், மழலைச் சொல் கேளாதவர்'' - என்ற குறள் எல்லாருக்கும் தெரிந்ததே. இதில் குறிக் கப்படும், யாழ்' என்ற இன்னிசைக் கருவி பண்டைத் தமிழர் நாடோறும் மீட்டி இசைத்துப் பயன்படுத்திய கருவி. இடைக்காலத் தில் யாழ் வழக்கொழிந்து விட்டது அதைப்பற்றி நன்கு ஆராய்ந்து தமிழிசைக்கு ஒப்பற்ற ஆராய்ச்சி நூலான 'யாழ் நூல்' என்பதை அளித்த தமிழறிஞர் விபுலாநந்த அடிகளாரே யாவார்.

இலங்கையில் காரைத்தீவு (காரேறு மூதூர்) என்ற இடத்தில் சாமித்தம்பியார் என்பவருக்கும் கண்ணம்மையார் என்பவருக்கும் கர ஆண்டு பங்குனித்திங்கள் 16 ஆம் நாள் (27-3-1892) வைகறைப் பொழுதில் புகழொளி பொலியத் தோன்றினர். பெற்றோர் இவர்க்கு 'மயில்வாகனன்' என்று பெயரிட்டனர்.

திரு. நல்லரத்தினம், குஞ்சித்தம்பி ,வசந்தராசப்பிள்ளை, வைத்திய லிங்க தேசிகர் ஆகியோரிடம் தமிழும் வடமொழியும் விபுலாநந்தர் இளமையிற் பயின்றார். கல்முனைமெதொடிச்த மிசன் பள்ளியில் 1903இல் ஆங்கிலக்கல்வி கற்கச் சேர்க்கப்பட்டார். மட்டக்களப்பில் அர்ச்மிக்கேல் கல்லூரியில் பயின்றார். தேர்வில் முதற்றகுதி பெற்றுத் தேறினர். அவர் அறிவாற்றலையுணர்ந்த கல்லூரித் தலைமையினர் அதே கல்லூரியில் ஆசிரியப் பணிபுரிய வாய்ப்பளித்தனர்.

1911ஆம் ஆண்டு விபுலாநந்தரின் அருமை யன்னையார் கண் ணம்மையார் இயற்கை எய்தினர் .அதனால் தன் பணியைத் துறந்தார். கல்முனை கத்தோலிக்கமிசன் பள்ளியில் ஆசிரியரானார். பின் கொழும்பு. சென்று ஆசிரியப் பயிற்சிபெற்றார். கொழும்பில் பண்டிதர் கந்தையா சி. தாமோதரம் (பிள்ளை) புலவர். கைலாயபிள்ளை ஆகியோரை அணு கிக் கழக இலக்கியங்களைக் கற்றார்.

அர்ச் மிக்கேல் கல்லூரியில் 1912இல் ஆசிரியப் பணியேற்றார் 1915இல் பொறியியற் கல்லூரியில் மேற்கல்வி கற்றார். 1916இல் மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர் தேர்வில் வெற்றிபெற்றார். 1917இல் அரசினர் பொறியியற் கல்லூரியில் உதவி இயைபியல்நூல் ஆசிரிய ரானார். 1917இல் யாழ்ப்பாணம் அர்ச் சம்பத் கிரீசியார் கல்லூரி அறி வியல் ஆசிரியரானார். இராமகிருட்டிண மடத்துத் துறவி சர்வா

நந்தரைச் சந்தித்தார். பிறகு இலண்டன் பல்கலைக்கழக அறிவியல் இளவல் (B. Sc.) தேர்வுக்குத் தனிமுறையில் கற்றுத் தேர்வெழுதி வென்றார்.

'யாழ்ப்பாணம் ஆரிய-திராவிட பாசாபிவிருத்திச்சங்கம்' ஒன்றை நிறுவினார். அதன் வாயிலாகப் பண்டிதர்' தேர்வு நிகழ்த்தினார்.

1922ஆம் யாண்டு துறவு பூண்டார். பிறகு தமிழகம் போந்து, சென்னை இராமகிருட்டிண மடத்தில் உறைபலானார். மடத்தில் 'பிரபோத சைதன்யர்' என்ற மாணிப்பெயர் (பிரமசாரியப் பெயர்) வழங்கப்பெற்றது. அம்மடத்தார் வெளியிட்ட 'இராமகிருட்டிண விசயம்' என்ற தமிழ் இதழுக்கும், 'வேதாந்தகேசரி' என்ற ஆங்கில இதழுக்கும் ஆசிரியராக விளங்கிச் சிறப்புற எழுத்துப்பணியாற்றினார்.

1924ஆம் யாண்டு சித்திரைத் திங்கள் உவா நாள் (முழுமதி நாள்) அன்று சிவாநந்தா அடிகள் அறிவுரையருளித் துறவறப் பெய ரிட்டார். அன்று தொட்டு விபுலாநந்த அடிகளார் என்று வழங்கப் பெற்றார். திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடத்தாரின் ஆண்டு நிறைவு விழாத் தலைமை ஏற்றார். பின் 'மதங்க சூளாமணி' நூலை இயற்றினார். 1925இல் ஈழநாடு திரும்பினார். அப்போது அவருக்குச் சீரிய முறையில் வரவேற்பளித்தனர். பின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியரானார். 1933இல் யாழ் ஆராய்ச்சி செய் வதற்காக அப்பணியைத் துறந்தார்.

ஆங்கிலம், வடமொழி, இலத்தீனம், யவனம், வங்கம், சிங்களம் பாலி, அரபு ஆகிய மொழிகளைத் தன்முயற்சியால் கற்றுப் பெரும், புலமை பெற்றார். விபுலாநந்தர் மொழிபெயர்ப்பில் மிகச் சீரிய திறன் பெற்றவராவார். தமிழில் மரபு சிதையா முறையில் தமிழ்க்கலைச் சொற்களை அக்காலத்திலேயே மொழிபெயர்த்தார். அச்சொற்களை ஆண்டு அறிவியற் கட்டுரைகள் பலவற்றை அவ்வப்போது எழுதி வெளியிட்டார்.

சென்னை இராமகிருட்டிண மடத்தின் சார்பில், 'விவேகானந்த ஞானதீபம்', 'கர்மயோகம்', 'ஞானயோகம்,, 'நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை', 'விவேகானந்த சம்பாடணைகள்' என்று பல நூல்களை எழுதி வெளியிட்டார். 1937ஆம் யாண்டு வடநாடு கடந்து கைலா யம், திபேத்து ஆகிய மொழிபெயர் தேளச் செலவு மேற்கொண்டு

மீண்டார். 1939இல் இமயத்திலுள்ள, 'மாயாவதி ஆச்சிரம' வெளியீடான 'பிரபுத்த பாரதா' ஆங்கிலத் திங்களிதழின் ஆசிரியப் பொறுப்பேற்று ஆண்டுச் சென்றார். இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராகப் பின் பணியேற்றார். பத்தாண்டுகள் பெரிதும் முயன்று ஆராய்ந்த பின் யாழ்நூலை யாத்து முடித்தார். யாழ் என்ற இசைக் கருவியைத் தாமே முயன்றறிந்து செய்து, அதனை மீட்டியும் இசைத் தார். அந்த யாழ்நூல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் கலைகணில் திருக்கொள்ளம் பூதூர்த் திருக்கோவிலில் சர்வசித்து ஆண்டு ஆவணித் திங்கள் 20, 21ஆம் நாள்களில் (20,21-6- 1947) அரங்கேற்றப் பெற்றது. பேராசிரியர் உரைவேந்தர். புலவர். ஔவை. சு. துரைசாமியவர்களால் நாச்சியார் நான் மணிமாலை, நாச்சியார் முன்னிலையில் படிக்கப்பெற்றபின் யாழ்நூல் அரங்கேற்றம் நிகழ்ந்தது.

பல்வகை யுழைபபால உடல தளர்ந்த விபுலாநந்தர் நோய் வாய்ப்பட்டார். கொழும்பு மருத்துவ விடுதியில் மருத்துவம் செய்யப்பெற்றது. ஆயின், 1947ஆம் யாண்டு ஆடித்திங்கள் 19ஆம் நாள் (19-7-1947) சனிக்கிழமை இரவு கலைத்தமிழ் அடிகளார்-விபுலாநந்தர்-இயற்கை யெய்திப் புகழ்வடிவமுற்றார். அவர் கல்லறை மீது விபுலாநந்தரின் இசைப்பாடல் பொறிக்கப்பெற்றது, இப்பாடல்:-

"வெள்ளைநிற மல்லிகையோ, வேறெந்த மா மலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ?
வெள்ளைநிறப் பூவுமல்ல; வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது!"

விபுலாநந்தரின் அழகிய உரைநடையிற் சில பகுதிகளை இவண் நல்குகிறேன்:-

"நல்லிசைப் புலவர் யாத்தமைத்த கவியிலே ஈடுபட்டு நெஞ்சமுருகி இன்புறுவோன் அக்கவிதையின்பால் அன்பு செலுத்துகிறான். கவிதையை யாத்த புலவன், படிப்போருக்கு இன்பம் பயப்பது கருதியே யாத்தான். ஆதலின், படிப்போனுக்கும் படிக்கப்படும் கவிதைக்கும் இடையே அமைந்த தொடர்பு பெருந்திணையின்று,கைக்கிளைத் திணையாமென்பது வெளிப்படை. மலையும் கடலும் கானலும் கழியும் யாறும் பொழிலும் ஊரும் வயலும் செஞ்சுடர்ப் பரிதியும் தண்கதிர் மதியமும் நீள்விசும்பும் விசும்பி

ளொளிரும் விண்மீனும் மழலைக் குழவியும் இளநகை மாதரும், அருந்திறல் மறவரும் பெருங்கொடை வீரரும் என நின்ற கவிதைப்பொருள் வாயின் இயைந்து நின்று நெஞ்சமுருகும் செஞ்சொற் புலவன் அப்பொருள் வாயின் அன்பு செலுத்துகிருன்; அப்பொருட் பகுதியனைத்தும் அழகுடையவாதலின்.

இயற்கை என்னும் பெண்ணணங்கு தலைவியாக, அத்தலைவியினது பேரழகிலே ஈடுபட்டகவிஞன் காதலனுகின்ருன். இயற்கையணங்கும் புனைவனபுனைந்தும், பூண்பனபூண்டும் அழகுவிளங்க நிற்பது தனது காதலனுகிய கவிஞனைக் கருதியே யென அறிதல் வேண்டும். கவியுணர்ச்சியில்லா ஏனைய மாந்தர் இயற்கை யணங்கின் அழகைக் காண்பதுமில்லை; காதலிப்பதுமில்லை. இங்ஙனம் நோக்குமிடத்து, இயற்கைக்கும் புலவனுக்கும் இடையேயுள்ள தொடர்பு கைக்கிளைத் திணையின்பாற்படுவதென அறிகின்ருேம்.''

('ஐயமும் அழகும்'-கட்டுரை: விபுலாநந்தர்)

''ஓவியனது உள்ளக் கருத்தே ஓவியத்திற்கு உயிர்போன்றது.''

(-வண்ணமும் வடிவமும்)

''நவிலுந்தோறும் இனிமை பயக்கும் நூல்நயம் போலவும் பயிலுந்தோறும் இனிமை பயக்கும் பண்புடையாளர் தொடர்பு போலவும், பார்க்குந்தோறும் அறிவுடையோனுக்கு உவகை யளிக்கும் ஓவியமே அழகிய ஓவியமாகும்'' (ஷெ)

''பஞ்சரத்திலுள்ள கிளிப்பிள்ளை பொன்வட்டிலிற் பாலடிசில் உண்ணுவதை இவ்வோவியம் காட்டுகின்றது எனக்காட்சி மாத்திரத்திலே அளந்து தீர்ப்பிடுதற்குரிய ஓவியம் அறிஞர்க்கு உவகை பயப்பதில்லை. 'இப்பொழிலகத்தே நிற்கும் மாமரத்தின் கனியினை இக்கிளிப்பிள்ளை உண்கின்றது எனற்குரிய ஓவியமும் முன்னையதைப் போல்வதே. ஆனுல் ஓர் ஓவியன் இவ்விரண்டினையும் ஒரு படத்திலே சித்திரித்துத் தருகின்ருன் என வைத்துக் கொள்வோம். பொழில் நடுவில் அழகிய மாளிகை. மாளிகை மேன்மாடத்தில் ஒரு மடவரல் பஞ்சரத்திற்கிளிக்குப்பாலடிசிலூட்டுகின்ருள். பக்கத்திலுள்ள மாமரக்கிளையிலிருக்கும் கிளி தன்னிச்சையாக மாங்கனியினை உண்கிறது.

இப்படத்தினைப் பார்த்தவுடனே நமது சிந்தையிலே பல்வேறு எண்ணங்கள் உதிக்கின்றன. இப்படம் சுதந்தர வாழ்க்கையை

யும் அடிமை வாழ்க்கையையும் குறிப்பிடுகின்றதா? அன்றேல், மனை வாழ்க்கையையும் துறவு வாழ்க்கையையும் காட்டு கின்றதா? பட்டின வாழ்க்கையையும் பட்டிக்காட்டு வாழ்க்கை யையும் காட்டுகின்றதா? என இவ்வாறெல்லாம் சிந்திக்கிறோம். கண்ணினைக் கவர்ந்தபடம் மனத்தினையும் கவர்ந்து விட்டது.

"மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப்படுமே" [தொல், பொருள்-செய்யுள்: 104] எனத் தொல்லாசிரியர் செய்யுளுக்குக் கூறிய,நோக்கு' என்னும் இலக்கணம் ஓவியத்திற்கும் அமைய வேண்டும். 'கவியிதயம், எதுவென நாம் ஆராய்ந்து கண்டு மகிழ்வுறுவதுபோல ஓவியனுள்ளத்தினையும் நாம் ஆராய்ந்து கண்டு மகிழ்வுறுமாறு ஓவியம் அமைய வேண்டும்."

(வண்ணமும் வடிவும்.)

"உயிர்ப் பொருள் உயிரில் பொருள்களிற் காணப்படும் சத்துவ வேறுபாடுகளைக் கண்ணுள் வினைஞரும் மண்ணீட்டாளரும் நுண்ணிதினோக்கி வண்ணத்தினாலும் வடிவினாலும் வெளிப்படுத் திக்காட்டுவார்; இசைவல்லோர் செவி கருவியாக ஆராய்ந்து, சத்துவ விகற்பங்களை இசையுருவாகத் தருவார். கவிஞனோ வெனிற் கண்ணினும் செவியினும் செவ்விதிற் புரிந்து, தான் பெற்ற இன்பத்தினை வையகம் பெறுமாறு செய்வான்." ('நிலவும் பொழிலும்')

இனிமைத் தமிழின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட ஈழத்தமிழறி ஞருள் விபுலாநந்த அடிகளார் ஒப்பற்ற ஒருவராவார். O

தமிழ்ச்சிட்டு

- O 'தென்மொழி' வெளியிடும் குழந்தைகளின் தனித்தமிழ்க்கலை இதழ்! மாத வெளியீடு.
- O 20 பக்கங்கள் - 15 காசு.
- O அறிவியல், மொழிப்பயிற்சி, வரலாறு, உலகச்செய்திகள் சிறுகதைகள், துணுக்குகள், புதிர்கள் முதலிய எண்ணிறந்த செய்திகள்.

உங்கள் குழந்தைகள் படிக்கின்றனவா?

இல்லையேல் அவர்களை இன்றே உறுப்பினர்களாக்குங்கள்.

ஆண்டுக் கட்டணம் 2 உருபா,

தமிழ்ச்சிட்டு: கடலூர்-1.

பைத்தியமும் அதை நீக்கும் வகையும்.

இக்கட்டுரை படிப்போர், பிறரையும் படிக்குமாறு செய்யவேண்டும். வளருகின்ற பொறி உலகில் மக்கள் உளநோய் பலவால் துன்புறுகின்றனர். இந்த உளநோய்களால் எண்ணற்றோர் பைத்தியங்களாகி விடுகின்றனர். நகரத்தில் இன்று தெருவுக்குத்தெரு பைத்தியங்களைப் பார்க்கிறோம். பலர் இப் பைத்தியங்களின் பால் இரக்கப்பட்டாலும் அவர்களை அந்நோய்களிலிருந்து விடுபாடு செய்ய விரும்புவதில்லை; காரணம் பலர் பைத்தியம் தீர்க்கப்பட முடியாத நோய் என்றே கருதுகின்றனர். உண்மை அதுவன்று; பைத்தியங்களை நாம் நோய்களிலிருந்து விலக்கிப் புதுமகிழ்ச்சி காணச்செய்ய முடியும்.

மாந்தர்களுக்கு வரும் துன்பங்கள் இருவகை; ஒன்று உடல்வழித் துன்பம்; பிறிதொன்று உளவழித் துன்பம். உடல்வழித் துன்பம் நோய்களால், காயங்களால், எதிர்பாராத ஏதங்களால் (விபத்து) வருவது. உளவழித்துன்பம் நம்முடைய எண்ணங்களால் வருவது. நாம் நினைத்தால் இரண்டையும் விலக்கமுடியும். வருமுன்னர் இரண்டையும் தடுத்துத் துன்பமின்றி வாழமுடியும். வந்தபின்னரும் இரண்டையும் சரியான நடவடிக்கைகளை மேற்கொண்டு விரட்டமுடியும். நோய்வரின் மருத்துவரைக் கண்டு மருந்து பெற்று நலமடைகிறோம். இன்றுள்ள எல்லாவகை உடல் நோய்களுக்கும் மருந்துகள் கண்டுள்ளனர். ஆனால் இன்றுவரை உளநோய்க்குச்சரியான மருந்துகள் தரப்படவில்லை; யான் ஈண்டுக்கூறும் வழிகளை ஆராய்ந்தால் உளநோயும் பைத்தியமும் வெல்லத்தக்கனவே என்பதை அனைவரும் ஒப்புவர்.

உளநோய்கள்தாம் பைத்தியத்திற்குக் காரணம்; எனவே உளநோய் பற்றிச் சற்றுப் பார்ப்போம். உளநோய் பலவகைக் காரணங்களால் ஏற்படுகிறது. உளநோய்க்குச் சில காரணங்கள்

(1) பேரிழப்பு.
(2) தோல்வி(தேர்வில் தோல்வி, காதல் தோல்வி)
(3) மிகுந்த அச்ச உணர்வு.
(4) ஒன்றில் அளவுக்கு மீறிய பற்று.
(5) தொடர்ந்துவரும் எண்ண அலைகள்.
(6) குற்ற நெஞ்சம்.

திடீர்ப் பைத்தியவகை—பேரிழப்பு.

ஒருவர் பெரிய பணக்காரராக இருக்கிறார். அவர் பணம் முழுவதையும் ஒரு வங்கியில் வைத்திருக்கிறார் என வைத்துக்கொள்வோம். அந்த வங்கி மூழ்கிவிட்டதாக, அல்லது எரி உண்டதாகக் கேள்விப்பட்டவுடன் அவர் பைத்தியமாகக்கூடும். அல்லது ஒருவரின் அண்ணனோ தங்கையோ அன்னையோ இறந்துவிட்டதாகத் திடீரென்று செய்தி கிட்டினால் அவர் பைத்தியமாகக்கூடும்.

இந்தவகைப் பைத்தியத்திற்குக் காரணம் திடீரென்று துயரச் செய்தி கிடைக்கிறது. மறுநொடியே பெரிய அதிர்ச்சி மூளையைப் பலமாகத் தாக்குகிறது; எனவே மூளை நிலைகலங்கிக் குலைப்புண்டு விடுகிறது; அதன் சீர்குலைவு மீண்டும் அதைப் பழைய நிலைக்கு மீட்டுக்கொள்ள முடியாத அளவுக்கு வலியதாக ஆகிவிடுவதால் பைத்தியம் பிடிக்கிறது. எனவே துயரச் செய்திகளைப் படபடப்பும் பதற்றமும் இன்றி நாம் அறிவிக்க வேண்டும்.

இந்தவகைப் பைத்தியம் திடிரென்ற இழப்பு அதிர்ச்சியால் விளைவதால், அதற்கொப்ப அதிர்ச்சிகளை நாம் ஈட்டவகையில் செலுத்தல் வேண்டும். பணமிழநது பைத்தியமான ஒருவன் முன்னர் திடீரென்று பணம தோன்றின் ஒருவேளை அவன் மீளமுடியும்; நாம் கொடுக்கும் அதிர்ச்சி மூளையைத் தாக்கி அதைப் பழைய நிலைக்குச் செப்பனிடுவதாக அமைதல் வேண்டும். மிகக் கவர்ச்சியான பொருள்களைக் காட்டி மூளையின் ஓட்டத்தை மாற்றலாம்; அல்லது உடலில் சூடு, அடி, கிள்ளுகை வழியாக உணர்ச்சிகளை ஏற்றி மூளையில் தாக்குமாறு செய்யலாம. சீர்குலைந்த மூளையைப் படிப்படியாக முதல் நிலைக்குக் கொணருகின்ற முறையே இதில் தேவை.

தோல்வி:- மாணவன் தேர்வில் தோற்க நேரிடலாம். அவன் தோல்வியை பெரிய இழிவாகக் கருதலாம். பிறரைப் பார்க்கும்போது அவன் தோல்வி எண்ணத்தால் தாக்கப்படுகிறான்; தன்மதிப்புக்கு ஊறு நேர்ந்துவிட்டதாக எண்ணிக் கவலுகிறான்; அவன் எண்ண வட்டங்கள் ஒரேமையத்தை உடையன; அந்த மையம் தோல்வி. 'தோற்றேன், தோற்றேன் என்று அவன் மூளை முதலில் பேசும் - விரைவில் அவன் பைத்தியமாக மாறலாம். இதுபோலவே காதல் தோல்வியும்.

மிகுந்த அச்சஉணர்வு:- சிலர் ஏதம் (விபத்து) பற்றிய செய்திகளைப் படிக்கும்போது நடுநடுங்குவர்; எங்காவது கட்டிடம் இடிந்து

விழுந்ததாகக் கேள்விப்பட்டால், தம் வீடும் இப்படி இடிந்து "நாம் இறப்போமோ?" என்று எண்ணி அலமருவர்; ஊர்திகளை நோக்கும் போது ஏதங்கள் மனக்கண்ணில் தோன்றி இவரை அச்சுறுத்தும். இந்த அச்சவுணர்வு ஆழமாக உணரப்படுதலினாலும், மீண்டும் மீண் டும் மூளையில் முட்டுவதாலும் அஃது உளநோயாக மாறுகிறது. விரை வில் இதுவே பைத்தியமாக முற்றும். மடத்தனமானது இந்த வகை அச்சம்; இதை அறிவுவழியில் தவறென்று நாம் உணர்த்தவேண்டும்,

அளவுக்குமீறிய பற்று:- மாந்தர் ஒரே திசையில் பற்றை அள வுக்கு மீறிச் செலுத்துதல் தவறேயாம். தீக்குளித்த சின்னச்சாமி பற்றி நாம் கேள்விப்படுகிறோம். அவர் தமது பற்றை முழுவதுமாகத் தமிழ் பால் செலுத்தினர்; அவர்பற்று மனைவிபால், குழந்தைபால், நில புலங்கள்பால் சற்றும் திரும்பவில்லை; தமிழ்மீது அவர் கொண்டபற்று நெடுநாளைக்கு அவருக்கு வருத்தத்தையே தந்திருக்க வேண்டும்; பல நாட்கள் அவர் தமிழ்நிலை பற்றி எண்ணி மனங்கவன்றிருப்பார்; இந் தித் திணிப்பு அவர்கவலைக்கு முடிவைத்ததாக அமைந்தது; இந்தித் திணிப்பை ஒட்டி அவர் தீக்குளிக்க வேண்டும் என்ற உறுதியான முடி வுக்கு வராது, உள்ளத்தில் எண்ண அலைகளுக்கு இடந்தந்திருப்பா ரானால் கட்டாயம் பைத்தியமாகி இருப்பார். எனவே நம்முடைய பற்று களைப் பலதிசைகளில் நாம் செலவிடவேண்டும்; அப்படிச் செய்கின்ற காலையில் ஒரு திசையில் நமக்குத் தோல்வி வரினும் மறுதிசை ஊக்கம் தரும்; ஆனால் ஒரே திசையில் செல்வது அத்துணைச்சிறந்தது அன்று.

தொடர்ந்துவரும் எண்ண அலைகள்:- இது பலவகைப் புறத் தொல்லைகளாலோ அகத் தொல்லைகளாலோ வருவது; ஒருவனுக்கு வீட் டில் குழந்தைகள் நோய்வாய்ப்படலாம்; அலுவலகத்தில் மேலாளர் அவரைத் திட்டிப் பேசலாம்; அடிக்கடி மனைவி சண்டையிடலாம், பொருளியல் தொல்லைகள் தாக்கலாம்; இப்படித் தொடர்ந்துவரும் தொல்லைகள் அகத்தில் சுவடுகளைப் பதித்துவிடுகின்றன, ஒருவன் செல்வனாகவும் ஏந்துள்ளவனாகவும் இருக்கலாம்; ஆனால் அவன் சில குறிப்பிட்ட எண்ணங்களால் வருத்தமுறலாம். சான்றாக அவன் அரசி யல் நிலைபற்றியும், மக்கள் நிலைபற்றியும், ஒழுக்கக்கேடுபற்றியும் அடிக்கடி நினைத்து வருந்தலாம். புற நடவடிக்கைகளில் அவன் ஈடு படாது அடிக்கடி இந்த நினைப்புகளில் ஆழ்ந்தாலும் பைத்தியம் வர லாம்.

குற்ற நெஞ்சம்:- இதுவே உளச்சான்று; ஒருவன் உள்ளத்தில் அவன் செய்த நன்மைகளைக் காட்டிலும் குற்றங்களே ஆழ்ந்த அடிச் சுவடுகளைப் பதிக்கவல்லன. அதுபோலவே இன்பங்களைக் காட்டிலும் துன்பங்களே நெஞ்சில் நிலைக்கின்றன; எனவே குற்றம் செய்தவர் கொலையாளியாக, கற்பழித்தவராக, திருடியவராக இருக்கலாம். பிறரைக் காணும்போது எல்லாம் இந்தக் குற்ற உணர்வு தலையெடுத்து வருத்தும்; அடிக்கடி இந்தக் குற்ற நினைவுகள் தோன்றின் மனம் புழுங்கிப் பைத்தியமாகின்றான். தவறு செய்யாதவர் யாருமே இல்லை; இனிமேல் தவறு செய்யாது இருந்தால் போதும் என்று எண்ணி மன நிறைவு பெறவேண்டும்.

பொதுவானவை:- மன அலைச்சலும், அடிக்கடி வரும் எண்ண அலைகளுமே பைத்தியத்திற்குக் காரணம்.

பைத்தியம் பிடிக்குமுன் சில புற அறிகுறிகள்.

(1) அவன் திடீரென்று தனிமை நாட்டம் கொண்டவனாக மாறுவான்; அவன் தனிமையை நாடுவது இயற்கையைச் சுவைக்கவோ இலக்கியங்களைப் படிக்கவோ அன்று; முட்டிக்கிளம்பும் எண்ணங்களுக்கு இடந்தரவே அவன் தனிமை நாடுகிறான்; தனிமையின்போது அவன் தன் தோல்விபற்றி எண்ணி எண்ணி அழுவான்; செய்த குற்றம் பற்றி நினைந்து அரற்றுவான்; அவன் தனிமையினின்று திரும்பும்போது அவன் முகம்காட்டும் துன்பக் கோடுகளிலிருந்து நாம் இதை உய்த்து உணரலாம்.

(2) அவன் தனக்குள் பேசிக் கொள்வான்.

(3) புறச் செயல்களுக்குச் சரியான மறுசெயல்கள் (Reactions) அவன் செய்வதில்லை; சான்றாக நீங்கள் அவன் அறையில் நுழைந்தால் ''வாருங்கள்; அமருங்கள்'' என்று வழக்கம்போல வரவேற்கமாட்டான். நீங்கள் சிரித்திடின் அவனும் சிரிக்க வேண்டுமல்லவா? ஆனால் அவன் சிரிக்கமாட்டான்; அல்லது சிரித்தாலும் அஃது இயல்பான சிரிப்பாக இருக்காது.

(4) கவனக் குவிப்புத்தேவைப்படும் செயல்களை அவனால் செய்ய முடியாது. சான்றாக தூவலில் அவனால் மை சிந்தாத வண்ணம் ஊற்ற

முடியாது; கத்தியினுல் காயம்படாவண்ணம் மயிர்மழிக்க முடியாது; 50 குண்டூசிகளை ஒரே நேர் கோட்டில் அடுக்கமுடியாது.

(5) அவனுக்கு உடல் உணர்ச்சி அஃதாவது தொடு உணர்ச்சி இருக்காது; கிள்ளினுல் அவனுக்கு வலி பெரிதாகத் தோன்ருது; உண்ணும் உணவின் சுவையும் மட்டுப்படாது; குளித்தாலும் நீரின் குளிர்மை அவனுக்கு உறைக்காது; திடீரென்று குரல் எழுப்பினுலும் அவனுக்கு அஃது அதிர்ச்சி தராது; பசியும் தோன்ருது.

(6) அவன் இரவில் துயிலமாட்டான்; அப்படித் துயின்ருலும் தூக்கம் முழுவதும் கனவுகளே நிரம்பியிருக்கும். நள்ளிரவில் எழுந்து கண்டபடி அலைவான்; அல்லது பேசாமல் உட்கார்ந்து இருப்பான்.

(7) அவன் முகம் கலையோடும், கண்கள் ஒளியோடும் காணப்படமாட்டா. துன்பத்தின் சாயலை அவன் முகம் தெளிவாகக் காட்டும்.

(8) அவன் கண்கள் பார்க்கமாட்டா; அப்படிப் பார்ப்பனவற்றையும் புரிந்துகொள்ள மூளை துணை செய்யாது.

சுருங்கக் கூறின் படிப்படியாக அவன் உடல்சார்ந்த ஐம்புல உணர்ச்சிகளையும் இழந்து, மூளைக்குள் ஒடுங்கி விடுவான்.

அக அறிகுறிகள்.

(1) அவனுக்கு உலகம் துன்பமானதாகத் தோன்றும்; வாழ்வில் நம்பிக்கை குறையும்; உலகத்தை விட்டுச் செல்வதை அவன் விரும்புவான்.

(2) அவன் உள்ளத்திரையில் அடிக்கடி காட்சிகள் தோன்றிய வண்ணம் இருக்கலாம். அவன் தனக்குத் தெரிந்தவரோடு பேசுவது போலவும், நடப்பது போலவும், தன் வீட்டில் அமர்ந்து படிப்பதுபோலவும் காட்சிகள் மூளைத்திரையில் மிகமிகத் தெளிவாகத் தோன்றும்; அஃதாவது அவன் முன்பு பழக்கப்பட்ட பொருள்களும், இடங்களும், ஆட்களும் தோன்றுவர்; இக் காட்சிகள் பொதுவான மாந்தன் கண்களால் புறப்பொருளை எவ்வளவு தெளிவாகப் பார்க்கிருனே அவ்வளவு தெளிவாக அவனுக்குத் தோன்றும்!

(3) அவன் மூளைக்குள் பேச்சு நடைபெறும். சான்றுகத் தேர்வில் தோற்ற மாணவன் "தோற்றேன், தோற்றேன்" என்றே மூளைக்குள் பேசிக்கொள்வான். அவன் பார்க்கும் பொருள்களை உருவிலா முறையில் (immaterial) அறிய முடியாது; அஃதாவது அவன் சாலையில் ஒரு வண்டி போவதைப் பார்த்தால் "வண்டி போகிறது" என்று மூளைக்குள் பேசிப் புரிந்து கொள்ளலாம். வண்டி போகிறது என்ற உணர்வை அவன் உருவிலா முறையில் அறிதல் கடிதாகவே தோன்றும்.

கடைக்குப்போக அவன் விரும்பினால் அந்த நினைவு "நான் கடைக்குப் போகவேண்டும்" என்னும் மூளைக்குள் நடக்கும் பேச்சுவழி உருவாகலாம்; அல்லது கடைதோன்றி அதன் முன் தான் நின்றுவாங்கும் காட்சிதோன்றிக் காட்சிவழியாக உருவாகலாம்.

(4) அவன் நினைவோட்டங்கள் ஒரே மையத்தை வைத்துச் சுழலும். அஃதாவது அவன் காதலில் தோற்றவனாய் இருந்தால், ஓர் இளம் பெண்ணைப் பார்க்கும்போது அவள் தன் காதலியாகஇருக்கமாட்டாளா? என்று எண்ணுவான்; ஒரு முதியவரைப் பார்க்கும்போது அவர் மகளாகத் தன் காதலி இருக்க நேரிட்டுத் தான் அவளை மணக்கலாகாதா? என்று ஏங்குவான். ஒரு மகிழுந்து செல்வதைப் பார்த்தால் தன் காதலியோடு நாமும் ஒருநாள் இப்படி மகிழுந்தில் செல்லக் கொடுத்துவைக்கவில்லையே என்று எண்ணி ஏங்குவான்.

அஃதாவது அவன் கண்ட காட்சிகள் எல்லாம் கண்டகண்ட அளவில் காட்சிகளாக உய்த்துணரப்படாது. எண்ணங்களை எழுப்பி அந்த எண்ணங்களைக் காதலியைச் சுற்றி வலம்வர வைக்கின்றன என்பதை நாம் அறியவேண்டும்.

(5) தற்கொலை எண்ணம், ஊரைவிட்டு ஓடும் எண்ணம் அடிக்கடி தோன்றும்.

(6) அவனுக்குத் தான் இன்னது நினைக்கிறோம், இன்னது பேசுகிறோம், இன்ன காட்சிகள் மூளையில் தோன்றுகின்றன என்ற உணர்வே இருக்காது; அஃதாவது அவன் இரண்டு மூன்று மணிநேரங் கழித்துத்தான் இத்துணை நேரம் நினைத்துக்கொண்டிருந்தோம் என்று எண்ணுவான். அவன் மூளை மிக விரைவாக, அவனது கட்டளையின்றி மிகமிக விரைவாக ஓடும். அஃது எந்திரம்போல குறிப்பிட்ட எண்ணங்களை மீண்டும் மீண்டும் எழுப்பிக்கொண்டே இருக்கும்.

(7) அவனுக்கு மூளை கடுமையான வலியைத்தரும்; காரணம் எப்போதும் அஃது ஒன்றுதானே இயங்குகிறது.

தடுப்பு வழிகள்.

(1) அவன் மூளையின் விரைவை, அதன் எண்ண ஓட்டத்தை நாம் தடுக்க வேண்டும். அவன் குருதி ஓட்டத்தை மூளையில் பரவ விடாது பிற உடலுறுப்புகளுக்குத் திரும்பினால் அவன் மூளை நினைக்கும் திறனைச் சற்றே குறைக்கும்.

அவனை நீண்ட தொலைவு ஓடச்செய்யலாம். அவனை நீண்ட நேரம் விளையாட்டில் ஈடுபடுத்தலாம். அஃதாவது கடிய, உடலை வருத்தக்கூடிய உழைப்பை அவனுக்கு நாம் கொடுத்தால், மூளையானது உடல் வலியை உணர்ந்து எண்ண ஓட்டத்தைக் குறைக்கும்.

(2) அவனிடம் பருப்பொருள்களைக் காட்டி அவனைக் காட்சியில் ஈடுபடுத்த வேண்டும். மரத்தைக் காட்டி 'அஃது என்ன மரம்?' என்று கேட்கலாம்; பொத்தகத்தின் தலைப்பைப் படிக்கச் சொல்லலாம்? ஒரு பறவையைக் காட்டி அஃது என்ன பறவை? என்று கேட்கலாம். இந்த முறையில் நாம் அவன் கண்களுக்கு வேலைதந்து மூளையின் நினைவைப் புற நடவடிக்கைகளில் திருப்புகிறோம். இப்படி ஒரு பத்துப் பதினைந்து நாள் அவனை நாம் தொடர்ந்து புற உலகில் திருப்பினால் அவன் தானே புற உலகில் திருப்பி எண்ணத்தைத் தடுப்பான்.

(3) அழகான கவர்ச்சியான அவனுக்குப் பிடித்த பொருள்களைக் காட்டி அவன் ஆவலை அவற்றின்பால் திருப்பலாம். மாணவன் ஒருவன் படிப்பின் அக்கறையில் பைத்தியமானால் அவனிடம் பல பொத்தகங்களைக் காட்டிப் படிப்படியாக அவன் கவனத்தைத் திருப்பவேண்டும்.

முடிவாகக் கூறின் நம் நோக்கம் எல்லாம்

I அவன் மூளையின் விரைவைக் குறைக்கவேண்டும்.

II அவன் எண்ணும் காலத்தைக் குறைக்கவேண்டும்.

III அவன் புற உறுப்புகள் மெய், வாய், கண், மூக்கு, செவி இவற்றிற்கு உணர்ச்சியை மீட்டுத்தரவேண்டும். புற உறுப்பில் முதலில் கண்ணாலோ, மெய்யாலோ, உணர்ச்சி ஊட்டல் வேண்டும். கண்ணும், உடலுமே வலிந்த புலன்களாம்.

அவனுக்கு இந்த உலகம் இனியது; அதில் பல அழகிய, நகரத்தக்க பொருள்கள் இருக்கின்றன. அவன் இழந்த செல்வமோ, காதலியோ வாழ்க்கை அன்று; வாழ்க்கையின் ஒரு கூறுதான். எனவே வாழ்க்கையை அதன் ஒரு கூறுக்காகப் பலியிடலாகாது என்பதை உணரச் செய்யவேண்டும். நினைப்பு என்பது மாயை; அஃது உண்மையன்று; காண்பதே, கேட்பதே உண்மை என்பதை அவனுக்கு நாம் உணர்த்த வேண்டும். இவற்றைச் செய்யின் நாம் பைத்தியமாகின்றவரையும், அல்லது பைத்தியமாக உள்ளவரையும் குணமாக்கலாம்.

கற்பனைகள் அல்லது கெட்ட எண்ணங்கள்: சிலர் கற்பனையில் இன்பங்காணுவர்; தமக்குப் பிடித்த பெண்ணையோ ஆணையோ சுற்றி அல்லது பொருளைச் சுற்றி எண்ணங்களை ஓட வைத்து மகிழ்ச்சி காணுவர்; இது மிகக் கொடிது; தொடக்கத்தில் இன்பமாகத் தோன்றலாம்; ஆனால் காலம் மிக மிக இந்த இன்பக் கற்பனையோ நம்மை ஆண்டு, நம் கடமைகளைத் தட்டிக் கழிக்கச் செய்யும்; ஐந்து பத்து நிமையங்கள் வேண்டுமானால் கற்பனையில் இன்பங் காணலாம்; அதே நேரம் மிகுந்தால் விளைவது துன்பமே. முன்வாழ்ந்த துறவிகள் பல்லாண்டுகள் காட்டில் தவம் புரிந்ததாகக் கூறுவது கடும் பொய்; ஒரு துறவி ஐந்துநாள் புற உறுப்புக்கு வேலைதராமல் தொடர்ந்து கடவுளை எண்ணியிருந்தால், ஆறுவது நாளே பைத்தியமாகி இருப்பான்; எனவே கடவுட்பற்றுளர் கடவுள்தானே என்று மிகையான நேரம் இறை வணக்கத்தில் செலவழிக்க வேண்டா.

சிலர் தேவையற்ற கெட்ட எண்ணங்களைக் கற்பித்து (கற்பனை செய்து) வருந்துவர்; கொலைசெய்வது போலவும், ஒரு பெண்ணிடம் தவறாக நடப்பது போலவும் அல்லது குற்றம் செய்வது போலவும் எண்ணி நடுங்குவர். கெட்ட எண்ணங்கள், மிகக் கீழான எண்ணங்கள் எல்லார்க்கும் தோன்றக்கூடும். எனவே கெட்டதை நினைக்கிறோமே என்று எண்ணி அஞ்சவேண்டா. மறுநொடியே உங்கள் கண்முன் உள்ள காட்சிகளைப் பார்த்து மறந்து விடுங்கள்; அதை நினைக்க நினைக்க நாம் அதனிடம் தோற்றுவிடுவோம்,

மகிழ்ச்சியாக வாழ

(1) உளப் போராட்டங்கள் நடக்கும்போது புற உலகில் ஈடுபட்டு அவற்றை மறக்கடியுங்கள். உள்ளத்துள் தோன்றும் எந்தக் கவலைக்கும் எண்ணங்களால் விடிவு காணமுடியாது; கண்களின் வழிக் காட்சியைக் கண்டு உள்ளத் தொல்லைகளை மறக்கடியுங்கள்.

(2) இழந்த ஒன்றை எண்ணி வருந்தாதீர்கள்; இழந்தவையை எண்ணி வருந்தும்போது இருப்பவையும் போய்விடலாம். எனவே இழந்தவை பெரியன அல்ல; உங்களிடம் இருப்பனதாம் பெரியன.

(3) எதையும் உணர்ச்சி வயப்படாமல் அறிவுக் கண்ணோட்டத்தில் எண்ணிப் பழகுங்கள்; உணர்ச்சி துன்பத்தைத்தரும்; அறிவுவழி எண்ணுவது சிக்கலைப்பகுத்துத் தருவதோடு அதற்கான விடிவையும் தரும்.

(4) எதற்கும் வருந்தாதீர்கள்; வருத்தத்தினால் செயல்கள் நடைபெறா. நினைவு ஒரு மாயை என்பதையும் அந்த நினைவு ஏமாற்றக் கூடும் என்பதையும் அறிக. நீங்கள் பார்ப்பதும் கேட்பதும் மிகமிக உண்மையானவை என்பதை அறியுங்கள். நீங்கள் பார்க்காததையும் கேட்காததையும் பற்றி எண்ணிக் காலத்தை வீணாக்காதீர்கள்.

(5) உலகத்தில் அழகும் இன்பமும் எல்லா இடத்திலும் உள்ளன. இலக்கியம், ஓவியம், பாட்டு, விளையாட்டு இப்படி ஆயிரக் கணக்கான பொருள்களில் அழகையும் இன்பத்தையும் காணமுடியும்; எனவே உங்களிடம் உள்ள குறைகளையே எண்ணி வாழ்வில் பல மகிழ்ச்சிகளை இழக்காதீர்கள்.

O தமிழக மகளிர்க்கொரு தனித்தமிழ்ப் பெட்டகம்!
O இல்லறம் பேணும் நல்லறப் பெண்டிர்க்கொரு தாயகம்!
O தமிழ்க்குலப் பெண்மணிகளின் கண்மணி!

பாவை

மகளிர் திங்கள் இதழ்!

ஆசிரியர்

குருமணி

தைத்திங்கள் முதல் நாளன்று மலரவிருக்கின்றது.

தனியிதழ் 50 காசு. ஆண்டுக் கட்டணம் உரு: 6-00.

எல்லா ஊர்களுக்கும் முகவர் தேவை.

எல்லா விளக்கங்களுக்கும்:

பாவை

சிதம்பரம் (தெ. ஆ.)

- மணிவேலன் -

இந்தி? இந்தி? இந்தி?

கூழாங்கல் ஏராளம்! கிடைப்பதுவோ மிகவெளிது!
அதையாரும் கொள்வா ருண்டோ?
ஆழத்தில் மண்ணடியில் கிடந்தாலும் மணியென்றால்
அதைமுடிமேல் அணிவா ரன்றோ?
பாழான கழுதையொலி வலிதெனினும் அதைச் சுவைக்கும்
ஒருமுளி பாரில் உண்டோ?
யாழான மென்குரலால் குயிலொன்று பாடுவதை
சுவைக்காதார் யாரே உள்ளார்?

எண்மிகுந்த காக்கையினை அழகுமிகு இளமங்கை
மடிமீதில் எடுத்து வைத்தே
உண்ணென்று பாலோடு பழம்ஊட்டிப் பழவாயால்
தேன்முத்தம் ஊட்டல் உண்டோ?
தண்ணென்ற மொழியாலே தமிழ்பேசும் கிளியென்றால்
தளிர்க்கையால் தானே ஊட்டிக்
'கண்ணென்று' கொஞ்சிடுவாள்! கலைவிளக்கும் மார்போடு
சேர்த்தணைப்பாள்! 'கனி-வாய்' ஈவாள்!

பலகுட்டி போடுகின்ற பன்றியினை அருகிருத்தி
உடல்நீவும் பாவை யாரே ?
கலைமானின் குட்டியெனில் பட்டுடலைத் தளிர்க்கையால்
மிகவருடிக் கழுத்தைக் கட்டி
உலகத்தைக் கொடுத்தாலும் கொடுக்காத முத்தத்தை
யதன் முகத்தில் உவந்தே ஈவாள்!
பலவென்றே ஒரு பொருளை மதியார்கள்! சிலவெனினும்
சிறந்ததனைப் பாரே ஏற்கும்!

எட்டிக்காய் காடெல்லாம் இருந்தாலும் அதைப் பறித்தே
உண்கின்ற இழிஞன் உண்டோ?
எட்டாத உயரத்தில் இருந்தாலும் அருநெல்லி
விரும்பாதார் யாரே உள்ளார்?
கொட்டிப்பூ குளமெல்லாம் மிதந்தாலும் கொண்டையிலே
சூடுகின்ற குமரி யெங்கே?
வட்டநிலா பூத்ததுபோல் சிரிக்கின்ற தாமரையை
விரும்பாத மடந்தை யாரே?

இந்திமொழி பேசுகின்ற வடநாட்டார் பலரெனினும்
அதையெதற்கோ ஏற்க வேண்டும்?
செந்தமிழைத் தாய்வயிற்றில் இருக்கையிலே உணர்வாலே
படித்திட்டோம்! சீ! சீ!.... செந்தேன்
எந்நாளும் உண்டவாய் இந்நாளில் பிறர்க்காக
எட்டிக்காய் எதற்கோ உண்ணும்?
மொந்தைக்கள் குடித்தவர்போல் உளருதீர் வடபுலத்தீர்!
உம்மீசை மண்ணில் தாழும்!

இந்தியநா டென்கின்ற கூட்டினிலே பிணம்தின்னிக்
கழுகான இந்தி யோடு
செந்தமிழாம் பைங்கிளியும் வடுகமாம் இன்குயிலும்
சேரளமாம் மயிலும் ஒன்றாய்
எந்தவகை வாழ்ந்திடுமோ? இந்தியெனும் கொடுங்கழுகு
அவற்றினையே இரையாய் ஆக்கி
இந்தியநாட் டரங்கத்தில் குயிலாகப் பாடிமயி
லாயாட ஏங்கும் போலும்!

"ஒற்றுமையாய் வாழ்வதற்கும் உலகத்துக் கலையெல்லாம்
இன்றைக்கே ஒன்றாய்க் கற்க (!)
கற்றிடுவீர் இந்தி!" யென்று கொல்லன்வாழ் தெருவினிலே;
ஊசிவிற்கும் கயவர் தம்மைப்
பற்றிப்போய் விலங்கோடு விலங்காகக் காட்சிக்கு
வைத்தந்தக் கதவின் மேலே
"இற்றைக்குப் புதுவிலங்கு! வடநாட்டுக் காட்டினிலே
பிடித்த"தென எழுதி வைப்பீர்!

"படையனுப்பி இந்திப்போர் அடக்கிடுவோம்"! எனப்பேசும்
சிற்றினத்தார் பான்மை என்னே!
நடைபோட்டு நந்தமிழப் படைநடந்தால் எப்படையும்
புறங்காட்டி 'நடையைக் கட்டும்!'
பெடைக்கோழி யென்றாலும் குஞ்சுக்காய்க் கழுகோடு
போராடும்! ஏடா! தேனின்
அடையான எந்தமிழைக் காப்பதற்கே எந்தமிழர்
என்றேனும் அஞ்சு வாரோ?

"கொஞ்சுதமிழ் நெஞ்சினிலே பூட்டிவைத்துக் காக்கின்றார்
'அதைப்பறிக்கக் குண்டை ஏவி
நெஞ்சத்தைப் பிளந்திடுவோம்' என நினைத்து மகிழாதீர்!
நெஞ்சத்தின் குருதி மையாய்
எஞ்சாது தொட்டெடுத்து விரலென்னும் தூரிகையால்
சுவரெல்லாம் "ஒழிக இந்தி!
கொஞ்சுதமிழ் வாழ்க!" வென அடியோடு தேயும்வரைக்
குருதியெலாம் குறையும் மட்டும்

எழுதிடுவோம்! எழுதிடுவோம்! எம்முடலைக் கிழிந்தசட்டை
போலெடுத்தே எறிந்து விட்டுச்
செந்தமிழின் வேருக்கே எம்முயிரை நீராக்கி
வார்த்திடுவோம்! தெரிந்து கொள்வீர்!
குழந்தையினி தமிழ்நாட்டில் பிறக்கையிலே 'ஒழிக இந்தி!'
எனமுழக்கிக் குதிக்கும் கண்டீர்!
வழிவழியாய்க் காக்கின்றோம் தமிழ்! அதனால் பிறமொழிகள்
இறந்தாலும், வாழ்தல் கண்டீர்!

மறைந்துவரும் தமிழ்ச் சொற்கள்.

சோம்பல், அடிமை, அறியாமை யால்தமிழை
ஓம்பல் குறைவால் உலகவழக் கற்றொழிந்த
பைந்தமிழ்ச் சொற்கள் பலகோடி! ஈங்கதனால்
நைந்த தமிழர் நலிவு பலகோடி!
இன்று விழித்தோம்; இனியேனும் செந்தமிழை
நன்றாகப் பேணிவர நாமமுனைவோம்; நாற்புறமும்
சென்று மறைந்து வரும் செந்தமிழ்சேர் சொற்களை
ஒன்று திரட்டி, உரிய பொருள் ஆய்ந்தெழுதி
இப்பகுதிக் கேவிடுக்க; ஏற்ற பயின்றிடுக:
செப்பம் மொழிக்குச் சிறப்பு.

கீழுள்ள சொற்களைத் தொகுத்து விடுத்தவர்:
அ. பொன்னுச்சாமி, புலிகரம்பலூர், திருமுதுகுன்றம் (வட்)
தெ. ஆ. மா. வ.

அசதி–சோர்வு
அசமடக்கல்–வேலைகளை முடித்தல்
அதனை–திமிர்
அதப்பை–தவசத்திலிருந்து கழியும் குப்பைக் கூளங்கள்
அரவட்டை–வேலையற்ற கோடை நாள்.
அலுப்பை–பண்பாடற்றோர்
அறுப்புசாரல்–விளைவு முதிர்ச்சி
ஆக்கைப்பூட்டு–முடி வகைகளில் ஒன்று.
ஆப்பு–கட்டுப் பிடிப்பிற்கு அடிக்கப்படுவது.
இடைஞ்சல்–துன்பம்
ஈவடைதல்–மிளகாய் போன்றவை அறுவடை குறைதல்
ஊட்டி–தொண்டை
ஊக்கை–குட்டை
எக்காளம்–உள்ள மகிழ்வால் பிறரைக் கேலி செய்தல்
ஏடாமடி–ஒரு வேலை செய்கையில் ஒத்து வராமை
ஏதலை–ஒருவரைச்சாட்டி வேறொருவரை ஏசுதல்; ஒரு வேலையை யார் முன்செய்வார் என எதிர்பார்த்தல்;
ஒசடக்கை–ஓய்வு

கங்கணம்–உறுதி; மணவிழவின்போது மணமக்களுக்குச் செய்விக்கப் படும் ஒருவகைச் சடங்கு
கச்சந்தி–சாக்கு, கோணிப்பை
கணுங்கு–வீடுவேயப் பயன்படும் புல்
கந்து–வெல்லம காய்ச்சும் கொப்பரைக்குக் கட்டப்படும் செத்தை.
கம்பை–வெல்லம் காய்ச்சி ஊற்றப்படும் தொட்டி.
கறவை–பசுபோன்று பால்கறக்கும் இனம்.
காசாண்டி–செம்பினாலான சருவம்.
கிடங்கு–வெற்றிலைக் கொடிக்கால்.
குந்து–உலக்கை, கதவு போன்றவற்றின் அடிப்பாகம்
குறுணி–இரண்டு வள்ளம் (பட்டணம்படி $1\frac{3}{4}$)
கெச்சம்–உணர்வு
கெங்கு–ஓரம்
கெடு–ஒரு பொருள் கொடுக்கல் வாங்கலுக்குக் குறிக்கும் நாள்
கேவுதல்–குழந்தை தேம்பியழுதல்; பெட்டைக் கோழி முட்டையிடக் கத்துதல்.
கொங்கை–கம்பு, சோளம் போன்றவற்றின் மேல் தோல்
கொக்கி–பொருள்கள் மாட்டப்படும் கருவி
கொசுறு–மிகுதி
கொண்டி–ஆலையில் வலம்பை மாட்டப்படும் கருவி
கொதனை–மாடு தீனி தின்னும்போது கழிவடையும் பொருள்
கொதைதல்–தோண்டுதல்
கொத்து–அருகு வெட்டப் பழக்கத்தில் உள்ள கணக்கு (30 குழி)
கொம்பன்–தனக்காக எதையும் செய்பவன்
கோதண்டம்–புலால் துண்டுகளைக் கோர்த்திருப்பது
கோது–கரும்பிலிருந்து துண்டிக்கப்படும் நுனிப்பாகம்
சஞ்சாயம்–சல்லிசு
சட்டைசெய்–எதிர்பார்
சரவை–துன்பம்
சம்மங்கூடு–மழைக்காப்பிற்கு சம்பாலான கூடு
சக்காந்தம்–கிண்டல்
சுளுக்கி–எலி போன்றவற்றைக் கொல்லும் கருவி
சூரி–கத்தி
செரா–அடுப்பெரிக்கப் பயன்படும் குச்சி
சினை–ஆடு, மாடு போன்றவை கருவுறுதல்

சேர்த்தாளி-நண்பன்
சொச்சம்-மிகுதி; அசலுக்குக் கிடைக்கும் வட்டி
தளுவை-பழனி, திருப்பதி போன்ற தெய்வப் பதிகளுக்குச் சென்று வந்தவர்கள் நடத்தும் விருந்து
தண்டை வடும்பு-கூரையின் அடியில் வரியப்படும் வரிவு
திருவணி-மாடு, கமலை, வண்டி போன்றவற்றில் செல்லும்போது திருகிக்கொள்ளுதல்
தெரவுசு-நல்ல பொருள்
தொத்தல்-பிறருக்கு வம்பு தருபவர்
தொப்பை-தொந்தி
தொம்பை-ஆலைக்கதிர்; தானியக் கொள்கலம்
தோக்கடை-வேலை செய்கையில் ஏற்படும் முடை
தோண்டி-வாளி; கலயம்.
நசுவுணி-ஒன்றைப்பற்றி விடாமல் பேசுபவர்கள்
நாட்டான்-ஊரவைத் தலைவன்
நாதேரி-ஊர் சுற்றுபவன்
நாந்து-முதுகு
நொக்குதல்-நைய்யப்புடைத்தல்
நோஞ்சான்-வலிவற்றவன்
பச்சை-தன்வினை மாயச் செய்விக்கப்படும் சடங்கு
பல்லா-காட்டிற்குச் சோறு கொண்டுபோகும் கலம்
பாலாற்றி-வெல்லக் கொப்பரையில் பாலை, ஆற்றும் கட்டை.
பாரி-ஒரு வகை விளையாட்டு
புட்டம்-அழுக்கு
புழுதிக்கார்-புழுதியில் விதைத்து அறுவடை செய்யும் நெல்
பொட்டு-மணப்பெண்ணுக்கு அம்மானால் செய்விக்கப்படும் ஒருவகைச் சடங்கு
பொறுவு-புத்திக் கூர்மை
போவா புல்-அங்கொன்றும் இங்கொன்றுமாக உள்ள களை
மசையன்-அறிவுத் தெளிவற்றவன்
மந்தைக்கரை-ஊர் ஒதுக்கலிடம்
மவுசு-அழகு
மரு-உடலில் உள்ள ஒருவகைக் கொப்புளம்; மருந்து வகையில் ஒன்று
மறுகூறு-அம்மை வந்தவர்க்குத் திரும்பவும் ஏற்படுதல்
மறுக்களித்தல்-கால், கை மூட்டுகள் சுளுக்குதல்

மறிச்சி–கழனிகளிலுள்ள வரப்பு
மருப்படித்தல்–ஆட்டுக்குட்டிக்குப் பாலூட்டுவித்தல்
மறவை–பால் கறக்கப்படும் கலயம்
மூச்சாப்பு–அடைமழை பெய்து ஓய்ந்திருத்தல்
மூட்டம்–நெருப்பு
மெச்சுதல்–புகழ்தல்
மெதலி–மிகுதி
மேனை–வேலைசெய்யும் ஒவ்வொருவருக்கும் ஒதுக்கப்படும் அளவு
வட்டா–சோறுண்ணப் பயன்படும் ஏனம்
வருக்கை–பிளவு
வலம்பை–ஆலையில் மாடு பிணிக்கப்படும் மரம்.
வாகரை–வாய்ப்பான இடம்
விசி–மரப்பலகையில் இணைக்கப்பட்ட கட்டில்.
வேடு(தம்)–பானைகளின் வாய்ப்பாட்டில் கட்டப்படும் துணி.

முழக்கொடு முனை!

ச. அலைமணற்குழவி.

போர்ப்பறைச் சாற்றிப் புகழ்க்கொடி ஏற்றிட,
ஆர்ப்பரித் தன்னை அருந்தமிழ் நாட்டினை
மீட்க எழுந்திடுக! மென்றுயில் மேற்கொண்ட
நாட்டம் தவிர்க! நரிக்குபல் நாப்பணுற்ற
நவ்விக் கொடுநிலை நீட்டும் பிழையோர்க!
செவ்வி யுணர்ந்து செயற்றிறஞ் சால்க!
தலைநகர்த் தில்லியில் தண்டமிழ் மைந்தன்
கொலைவெறித் தீயர் குட்டக் குனியும்
அடிமை யாமோ? ஆண்டை எவரோ?
வெடிக்கும் உளத்திடை வீறிடுங் கண்ணீர்ச்
சொரிந்திட மன்றுடுஞ் சூழல் எதற்கோ?
உரிமை காத்திட ஒன்றி எழுமின!
இத்தரை மீதே இதுநாள் இயங்கிடும்
அத்தனைச் செம்மொழி ஆய்ந்து புதுக்கினும்
அன்னைத் தமிழ்முன் அடிதாழ்ந் திடுமே!
கொன்னே பிதற்றுங் குறுநொய் வடவரின்
இந்திச் சழக்கோ ஈர்ந்தமிழ் ஆள்வது?
கொந்தி எறிந்திடக் கூர்வா ளிலையோ?
வழக்கின் றெதற்கு? விடுதலை கேட்கும்
முழக்கொடு நாடே முனை.

பாவேந்தர் நன்றிக்கடன்.

(தென்மொழி விடுத்த வேண்டுகோளுக் கிசைந்து அன்பர்கள் பாவேந்தர் தம் குடும்ப நலத்திற்கென விடுத்த நன்கொடைப் பட்டியலைக் கீழே தருகின்றோம். தென்மொழியின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து நன்றிக் கடனாற்றிய அன்பர் யாவருக்கும் எம் அன்பு கலந்த வணக்கமும் வாழ்த்தும் உரியவாகுக.

கீழுள்ள பட்டியல் யாவும் பாவேந்தர் மகன் திரு. மன்னர்மன்னன் அவர்களால் கொடுக்கப் பெற்ற பணவிடைச் சாத்துகளை ஒப்பிட்டே தரப்பெற்றதாகையால், விடுபட்டுப்போன அன்பர்கள் யாவரும் இது குறித்துப் பாவேந்தர் மகனுக்கே மடல்கள் எழுதக் கேட்டுக் கொள்கிறோம். ஆ-ர்)

	உருபா
நேரிடையாக நன்கொடை விடுத்தவர்கள்,	
திரு. நா. கொடுக்க நாதன்; திரு. வீ. காசிலிங்கம் (மா. ஆ. விடுதி அழகப்பா கல்லூரி காரைக்குடி-3 தலைக்கு ஓர் உருபா மேனி.	2-00
திரு. க. இராமசாமி, சென்னை-6.	3-00
புலவர் திரு. நா தண்டபாணித மிழாசிரியர், கழக உயர்நிலைப்பள்ளி, வடகாடு ஆலங்குடி;	3-00
செயலர். ஆசிரியர் சங்க மையம், சுந்தரம்பள்ளி.	3-00
திரு. கு. கிருட்டிணன், தொலைபேசி நிலையம், கிருட்டிணகிரி.	1-00
திரு. திருவுடைமார்பன், ,, ,,	2-00
திரு. வை பூ. சோமசுந்தரம், க. அ, ஆ. ப கலிங்கப்பட்டி.	5-00
புலவர் திருமேனி நாகராசன், 6, மடத்துவீதி, காரைக்கால்	5-00
சிந்தனை மன்றம். தொட்டியபட்டி.	5-00
திரு. இரா. நடராசன், நுங்கம்பாக்கம். சென்னை-6.	5-00
திரு. சீனு, கோபாலகிருட்டிணன், ஆசிரியர் வடுகபாளையம், சேயூர் வழி, அவிநாசி	6-00
திரு. கணபதி, ஆசிரியர் எமனேசுவரம் (வழி).	6-00
திரு. பு. நா. பாலசுப்பிரமணியம் (செயலாளர் மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி). அவர்கள் சார்பாக.	7-00

திருவாளர்கள் நா. சிவசுப்பிரமணியன், இராமசுப்பிர மணியன், ஆறுமுகம், சுந்தரமகாலிங்கன், சண்முகம், நம்பி, சுப்பையா, குறுந்தாசு, திரவியம் (95, சேவியர் கல்லூரி விடுதி பாளையம்பதி, திருநெல்வேலி-2) 9-00

திரு. மணவாளன், தேவர்சிவண அள்ளி, பெங்களூர்-6. 10-00

பத்திரங்கோட்டை, சா. நடராசன் சென்னை-12.
அவர்கள் வழி விடுத்த நன்கொடை.

ஓர் உருபாமேனி கொடுத்தவர்கள்:

திருவாளர்கள்: ப. செகதீசன்; வி. கோ. மகாதேவன், அ. கிருட்டிணமூர்த்தி, பு. வ. இராமச்சந்திரன்; கே. மான்சிங்; இரா. சுந்தரம்; ந. எத்திராசன்; ம. கண்ணப்பன்; தி. பி. இராமச் சந்திரன்; தி. இராசு; மணிவண்ணன்; தனுசு; விநாயகம்; சண்முகம்; பி. சண்முகம்; சே. கிருட்டிணன், எசு. திருநாவுக்கரசு; சேமூவேல்தாமசு; ஆர். அரங்கநாதன்; வி. கிருட்டிணன்; து. இராமநுசம்; இராமச்சந்திரன்; கோவிந்தன்; ஒய். எம். சுப்பிர மணியம்; க. மா. ஆனந்தராசன்; மா. மு சாமி. (26) 26-00

இரண்டு உருபாமேனி கொடுத்தவர்கள்:

திருவாளர்கள்: வே. சந்திரகாந்தன்; எம். மதுரைமுத்து; அ. நூருதீன்; ப. கோபால்; பரசுராம்; அ. சுப்பிரமணியன்; ச. பி. சகன்னுதன்; பா. சோமசுந்தரம்; சி. ஆர் நாதன்; சி. பி. ஏழுமலை; டி. பழனிவேலு; சந்திரநாத்ன; ச. உலோக்நாதன்; சிரிராமுலு; க. கோபாலன்; கோ. சுந்தரவடிவேலன் (16) 32-00

திரு. சா. நடராசன். 6-00

திரு. நித்தியானந்தம். 3-00

திரு. மா. கண்ணப்பன். 5-00

திரு. மு. விசயரங்கம். 3-00

புலவர் திரு. சின்ன. இராமச்சந்திரன், தமிழாசிரியர்
திரு. இருதய உயர்பள்ளி, பொன்மலைப்பட்டி, திருச்சி-4.
அவர்கள் வழி:

திருவாளர்கள்: கிருட்டிணன், அடைக்கலசாமி, இராமச்சந்திரன், பாலசுப்பிரமணியன், சேவியர் அற்புதம், வேங்கடராமன், சம்பந்தமூர்த்தி, (தலைக்கு 5 உருபாமேனி.) 35-00

திருவாளர்கள்: ஆஞ்சலூஃச், சொரூபானந்தன், அ. சோசஃப், இக்னேசியஃச், பாலசுந்தரம், அப்பாவுசேவியர், சுப்பிரமணியன், சேவியர், ம. சோசஃப் (தலைக்கு ஓர் உருபாமேனி) 9-00

திரு. வைத்திலிங்கம். 2-00

திரு. சேசு அந்தோணி. 2-00

திரு. சீனிவாசன். 3-00

திரு. மு. சின்னசாமி, தொலைபேசித் தொழிலகம்
பெங்களூர்-16. அவர்கள் வழி.

திரு. இரா. மாணிக்கம் 2-00

திருவாளர்கள்: சின்னசாமி; ந. சண்முகம், ந. விசயசங்கர், உலோகநாதன், டி. இசுரவேல், ஞானவேல், ந செயராமன், தி. ஆ. பழனி, சு. சுந்தரராசன், சி. வேணுகோபால், வி. விக்டர் சி. செல்வராசன், கோ. சுவாமிநாதன், த. மூர்த்தி, தீனன், சி. சுப்பிரமணியன், மு. செகன்னாதன், அப்பன், ஞ. பலராமன், அரங்கநாதன், எம். சுப்பிரமணி, செ. கவிச்சந்திரன், உரூபன், முனிசாமி, வே. கோ. சு, மணியம், மு. மேகராசன், டி. ஆண்டுருசு பெ. தேவராசன், சி. நாராயணசாமி, வி. வேணு, க. முருகேசன், வ. இராசகோபால், வே. நாராயணசாமி, கே. எசு. சாம்தாசு, த. சு மணி; கே. சி. சுந்தரம், தி. சு. செ. மூர்த்தி, வேங்கடேசன் (தலைக்கு ஓர் உருபாமேனி) 38-00

திரு. பார்த்தசாரதி 0-50

மொத்தம்	238-50
முன் மொத்தம்	341-35
தொகு மொத்தம்	579-85

(தொடரும்)

உங்கள் பிள்ளைகள் 'தமிழ்ச்சிட்டு' படிக்கின்றனரா?
இல்லையெனின் இன்றுமுதலாகிலும் படிக்கச் செய்யுங்கள்.

O 'தென்மொழி' பால் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாகவும், சிலர் விலகிவிட்டதாகவும் கேள்விப்பட்டேன். மிகவும் வருந்தினேன். 'தென்மொழி' தமிழர்களுக்குப் புதிய ஒரு கொள்கையை விளைத்துக் கொடுத்துள்ளது. தமிழ்நாட்டு அரசியல், குமுகாயம், சமயம் யாவும் மொழியின் அடிப்படையில் இருக்க வேண்டுமென்பதே அக்கொள்கை...... எவர் பிரிந்து சென்றாலும் மனம் தளராதீர்கள். தமிழ்மொழி தனிப்பட்ட எவருடைய பிடியிலும் இல்லை. அதை வளர்க்க, தக்கமுறையில் 'ஒரு நிறுவனத்தையே' 'தென்மொழி' மக்களிடையே உருவாக்கியுள்ளது. அதனால் நீங்கள் தளர்ச்சியின்றி மேலே மேலே சென்று கொண்டே இருங்கள். —மணிவேலன், இ. க; ஆ. ப. ஆரூர், தருமபுரி.

O சென்ற இதழில் தாங்கள் எழுதியிருந்த சொல் ஒவ்வொன்றும் என்னை கூர்வேலெனத் தாக்கியது. இன்றையத் தமிழரின் நிலையெண்ணிக் கலங்கினீர்கள்; கண்ணீர் பெருக்கினேன். என் உடலில் ஓடுகின்ற குருதி தமிழ்க்குருதி. அஃது என்றும் தமிழுக்கே உரிய ஒன்று ...உங்கள் பணிசிறக்க எங்களால் ஆன எல்லாவகைச் செயல்களையும் செய்யக் காத்திருக்கின்றோம். வரும் இடரினை வெட்டிச் சாய்ப்போம். உங்களுக்கு வரும் இடர் எங்கள் பிணக்குவியலின் மீது வரும் இடராகும். —விநா. இராதாகிருட்டிணன், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

O நூறாசிரியப் பாக்கள் ஒவ்வொன்றும் அறிவுடையார் அனைவருக்கும் நல்ல தீந்தமிழ் விருந்தாகும். இக்காலப் புலவரும் அறிஞருமனோர் ஆயிரவர்கூடி அரிதின் முயன்றிடினும், இத்தகு பாடல்களில் ஒன்றாயினும், இயற்றி நந்தமிழ் ஆர்வலரை இன்புறுத்தி இன்றமிழ்த் தொண்டாற்றுதல் எளிதின் இயல்வதாகா என்பது திண்ணம். 'நூறாசிரியம்' ஒவ்வொன்றும் பல்கலைக் கழகப் பாடமாகவும், புலவர்க்குப் பயிற்று மொழியாகவும் அமைவிக்கத் தக்க புலமை மிக்க பாடல்களாகும் என்பது தெள்ளிதின் அணுகி ஒள்ளிதின் நுணுகுவார்க்கும் பிறர்க்கும் நன்கு புலனாகும். —மு. மகிழரசன், சென்னை-6.

தனித்தமிழ் வேந்தே! தண்டமிழ்க் கொண்டலே!!

அறியாமை இருள் கவிந்திருக்கும் அருமைத் தமிழகத்தின் இழிநிலை களையும் பைந்தமிழ்ப் பரிதியே! சென்ற இதழில், தங்கள் அரசியல் அறிவு-கொள்கை புரியாத அரைவேக்காட்டுப்பேதை நண்பரொருவரின் குழப்ப மடலுக்குத் தெளிவு மடல் இது. அறியாமைக்கோர் அறிவுரை!! செருக்களத்திலும் நேர்மை-வாய்மை வழுவாத் தமிழனின் மரபிலே தோன்றியுள்ள தன்னேரிலாத தமிழின் தகைமை காக்கும் மாண்பு கொண்டு எழுதப்பெற்ற ஆசிரிய வுரைக்கருத்துகளை யெல்லாம் மறுத்து—மன்னிப்புக்கோரி (பொறுத்தருளவேண்டி) ஒரு வேண்டுகோள் வெளியிட வேண்டுமென்று புலம்புகின்றார் நுனிப்புல் மேய்ந்த நண்பர்! கொள்கை விளங்காத கோமாளி! அரசியல் கட்சிகளின் இழிநிலை பற்றி ஆசிரியரவர்கள் கூறிய உண்மை உரைகண்டு குமுறுகிறார் தோழர். 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்பது போல்-தமிழகத்தின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு அல்லும் பகலும் பாடுபடுகின்றவர் தம் மக்களின் ஏற்றத்திற்குப் பாடுபடுபவரைக் கட்சிப் பூசலால் புறக்கணித்து விடல் முறையா? கூடுமா. எனவேதான் திரு. காமராசரை ஆசிரியருக்குப் பிடிக்கிறது.

'காமாலைக் கண்ணனுக்குக் கண்டது எல்லாம் மஞ்சள்' என்பது போல, கருப்புக் கண்ணாடி போட்டவனுக்குக் காண்பதெல்லாம் கருமையாய்த் தோனறுகின்றது. தென்மொழியைத் தொடர்ந்து படித்திருந்தால் நண்பருக்குக் கேள்வியே எழுந்திருக்காது.

செயலாளர், தொல்காப்பியர் மன்றம், உரந்தை.

△ 'தென்மொழி'யில் தொடர்ந்து சுவை தந்த தேனடை!

△ நூல் வடிவில் வெளிவருகிறது!!

○ மெய்ம்மைக் காதலுக் கேங்கிய
பேதைப் பெண் ஒருத்தியின் நெஞ்ச ஓவியம்!

○ வாய்மை காதல் வாயாவிடத்து – அதனைத்
தாய்மையாய்க் கனிவித்துக் கொண்ட,
தூய நெஞ்சின் துயர மாமழை

○ காதல் நுகராக் கன்னி இளமான்!
மாதர் தெய்வம்! மங்கையர் விளக்கம்!

துரை - மாணிக்கம்

எழுதிய

இனிய தனித்தமிழ்ப் பாவியம்!

☐ அழகிய மூவண்ண அட்டை!

O விலை ஓர் உருபா.

O விற்பனையாளர்க்கு 10 விழுக்காடு கழிவு கொடுக்கப்படும்.

O தேவைக்கு முன்கூட்டியே எழுதுங்கள்.

O அஞ்சலில் தனியிதழ் வேண்டுவோர் உருபா 1-25 விடுக்க

விளக்கங்களுக்கு

தென்மொழி

கடலூர்-க.

தென்மொழி மின்அச்சகம், கடலூர்-1.